பக்கங்கள்: பத்து

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 புரட்டாதி 17 புதன்கிழமை (03-10-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:311

# அரசமைப்புக் கவுன்ஸில் அமைப்பதற்கான காலக்கெடு நாளை மறுதினத்துடன் முடிவு!

## அது நீடிக்கப்படமாட்டாது எனக் கூறுகின்றது ஜே.வி.பி.

கொழும்பு,ஒக்ரோபர்3

**பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்பாட்டின் பிரகாரம் அரசமைப்புக் கவுன்ஸிலை அமைப்பதற்கான காலக்கெடு நாளை மறுதினம் 5 ஆம் திகதியுடன் முடிவடைகின்றது.**

**இந்தக் காலக்கெடு எந்தக் காரணம் கொண்டும் நீடிக்கப்படமாட்டாது என்று ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ தெரிவித்திருக்கின்றார்.**

அரசு - ஜே.வி.பி. உடன்பாட்டின் பிரகாரம் -

நான்கு சுயாதீன ஆணைக்குழுக்களை அமைக்கவும் -

அந்த ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரம் கொண்ட அரசமைப்புக் கவுன்ஸிலை ஸ்தாபிக்கவும் -

வழிசெய்யும் 17 ஆவது அரசமைப்புத் திருத்தம் கொண்டுவரப்பட்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி புரிந்துணர்வு உடன்பாட்டின்படி -

17 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழான அரசமைப்புக் கவுன்ஸில் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் அமைக்கப்பட வேண்டும்.

"உடன்பாட்டின் ஏனைய இணக்கப்பாடுகளை அதற்குரிய காலத்தில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நம்பிக்கையில்லாப் பிரேரணையை கூட்டணி ஆதரித்தேயாக வேண்டும்

### யாழ். ஆதரவாளர்கள் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஒக்.3

அரசுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையை யாழ்.மாவட்டக் கட்சி ஆதரவாளர்கள் கோரியுள்ளனர்.

கூட்டணியின் யாழ்.அலுவலகத்தில் நேற்றுக் காலை நடந்த கலந்துரையாடலில் பங்குகொண்ட நூற்றுக்கு மேற்பட்டவர்களே இந்தக் கோரிக்கையை ஒருமனதாக விடுத்தனர்.

கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவர் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் பங்குபற்றியவர்களிடம் நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாகக் கட்சியின் அணுகுமுறை எவ்வாறு அமைய வேண்டும் என அபிப்பிராயம் கோரப்பட்டது.

கூட்டணியின் ஐந்து நாடாமன்ற உறுப்பினர்களும் பிரேரணையை ஆதரித்து வாக்களிக்க வேண்டுமென்று சகலரும் கருத்து வெளியிட்டனர்.

(க-3-10)

## ஜனாதிபதி முறையை ஒழிப்பது குறித்து பிரதமருடன் ஜே.வி.பி. இன்று பேச்சு!

கொழும்பு,ஒக்.3

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பது தொடர்பாக பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவுக்கும் ஜே.வி.பி. பிரதிநிதிகளுக்குமிடையில் இன்று பேச்சுக்கள் இடம்பெறவுள்ளன.

இந்தப் பேச்சுக்களில் ஜே.வி.பியின பொதுச் செயலாளர் டில்வின் சில்வா, பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ ஆகியோர் பங்குபற்றுவர்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஆறுமாதத்துக்குள் ஒழிப்பது என்று அரசுக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் உடன்பாடு எட்டப்பட்டிருந்தது தெரிந்ததே.

இந்த விவகாரம் தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தே இன்றைய பேச்சில் ஆராயப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு ஐ.தே.கவின் ஆதரவு தேவைப்பட்டால் அவர்களுடனும் பேசுவோம் என்று ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

(க-3)

### படுகொலை செய்வதற்காக

## பிரதமரின் நடமாட்டங்களை கண்காணித்த நபர் கைதாம்

கொழும்பு,ஒக்.3

பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்காவைப் படுகொலை செய்ய விடுதலைப் புலிகள் திட்டமிட்டுள்ளதாகப் புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளன எனப் பொலீஸார் தெரிவித்தனர். இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக பிரதமரின் நடமாட்டங்களைக் கண்காணித்து வந்த நபர் ஒருவரைத் தாம் நேற்று முன்தினம் ஹொரணையில் வைத்து கைது செய்துள்ளதாகவும் பொலீஸார் தெரிவித்தனர்.

ஹொரணையிலுள்ள ஓர் ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் இவர், தன்னை ஒரு மலையகத் தோட்டத் தொழிலாளி குடும்பத்தவர் எனக் காட்டிக்கொள்ள முயற்சித்ததாகவும், கைது செய்யப்பட்டபோது தனது ஆளடையாளத்தை நிருபிக்கத் தவறியிருந்தார் என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

இந்நபர் படுகொலைக்கு வேண்டிய புலனாய்வுத் தகவல்களைத் திரட்டி வவுனியாவிலுள்ள புலிகள் இயக்கத் தலைவர் ஒருவருக்கு அனுப்பி வைத்தார் எனவும் பொலீஸார் குறிப்பிட்டனர்.

பிரஸ்தாப நபர் கைது செய்யப்பட்டதையடுத்து ஹொரணையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

(க-3)

### வவுனியா மாவட்டத்தில்

## சினைப்பர் தாக்குதல்களில் இரு சிப்பாய்கள் உயிரிழப்பு

வவுனியா,ஒக்.3

வவுனியா மாவட்டத்தில் கடந்த 24 மணி நேரத்தில் இடம்பெற்ற இரு வேறு சினைப்பர் தாக்குதல்களில் இரு சிப்பாய்கள் உயிரிழந்தனர் என்று படைத்தரப்பு தெரிவித்தது.

பறையனாளங்குளம் சோதனைச சாவடியில் காவலில் இருந்த சிப்பாய் மீது நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட சினைப்பர் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் காயமடைந்ததாகவும் -

பின்னர் அவர் அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் உயிரிழந்துவிட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

ஓமந்தைப் பகுதியில் உள்ள படைநிலையில் காவல் பணியில் ஈடுபட்டிருந்த சிப்பாய் மீது நேற்றுக் காலை 8.30 மணியளவில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட சினைப்பர் தாக்குதலில் அவர் உயிரிழந்ததாகவும் - படைத்தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

(க-3)

## புலமைப் பரிசில் முடிவுகள் நாளை இங்கு வெளியாகும்

யாழ்ப்பாணம்,ஒக்.3

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் நாளை வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் வெளியிடப்படவுள்ளன.

யாழ்வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஒருவர் பரீட்சை முடிவுகளை கப்பல் மூலம் எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - பரீட்சை முடிவுகள் பரீட்சைத் திணைக்கள இணையத்தளம் மூலம் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டபோதும் -

நேற்றே அதில் முடிவுகளைப் பெறக்கூடியதாக இருந்தது. (க-3)

### டோவர் துறைமுகத்தில் கைதான

## 26 இலங்கையரும் தற்காலிகமாக லண்டனில் தங்குவதற்கு அனுமதி

லண்டன்,ஒக்.3

அடைக்கப்பட்ட வான் ஒன்றுக்குள் ஒளித்திருந்து லண்டனுக்குள் புக முயன்ற சமயம் டோவர் துறைமுகத்தில் வைத்துக் கடந்தவாரம் கைதுசெய்யப்பட்ட 3 பெண்கள் உட்பட 26 இலங்கையர்களும் விடுவிக்கப்பட்டு லண்டனில் தற்காலிகமாகத் தங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர் என பிரிட்டிஷ் உள்துறை அமைச்சகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக பிரிட்டிஷ் பொலீஸார் தெரிவிக்கையில் -

தாம் கைது செய்த 26 இலங்கையர்களையும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னர் குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளிடம் கையளித்துள்ளதாகவும் -

அவர்கள் மீது தாம் எவ்வித சட்ட நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை, அதற்கான நடவடிக்கையை குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் மேற்கொள்வார்கள் எனவும் - குறிப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கனடாவில் தமிழ் இளைஞர் சுட்டுக்கொலை

ரொரண்டோ,ஒக்.3

கனடா ஸ்காபரே பகுதியில் தமிழ் இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினமிரவு நிகழ்ந்த இச்சம்பவத்தில் சுதர்சன் வேலாயுதபிள்ளை (வயது23) என்பவரே உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த சுதர்சன் (பபி) தனது நண்பர் ஒருவரின் வீட்டில் இருந்தபோதே சுட்டுக்கொல்லப்பட்டதாக பொலீஸ் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொலைக்கான காரணம் குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

## ரிஸ்வி எம். பி. காலமானார்

கொழும்பு,ஒக்.3

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய இணைப்பாளருமான ரிஸ்வி சின்னலெப்பை (வயது 42) நேற்று நண்பகல் கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் மரணமானார்.

கடந்த ஒரு மாதகாலமாக இவர் சிறுநீரகக் கோளாறு காரணமாக தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார்.

ஜனாஸா நல்லடக்கம் இன்று காலை கொழும்பில் இடம்பெறவிருக்கின்றது.

இவரது மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் உட்படப் பலர் அனுதாபச் செய்திகளை வெளியிட்டுள்ளனர்.

(க-3)

## ரிஸ்வியின் இடத்திற்கு எம்.பியை நியமிப்பதில் இழுபறிநிலை!

கொழும்பு,ஒக்.3

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான ரிஸ்வி சின்னலெப்பை காலமானதையடுத்து அவரது இடத்துக்கு புதிய உறுப்பினரை நியமிப்பது யார்?

இந்த விடயம் குறித்து தற்போது இழுபறிநிலை ஏற்பட்டுள்ளது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இணைந்து கடந்த தேர்தலில் போட்டியிட்டன.

இந்தத் தேர்தலின் பின்னர் தேசியப்பட்டியல் மூலம் ரிஸ்வி சின்னலெப்பை எம்.பியானார்.

முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் ரிஸ்வி சின்னலெப்பை நியமனம் பெற்றதால் புதிய எம்.பியை முஸ்லிம் காங்கிரஸே நியமிக்க வேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தரப்புக் கூறுகின்றது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேசியப்பட்டியல் மூலம் அவர் எம்.பியானதால் அவரது இடத்துக்குப் புதிய எம்.பியை பொதுமக்கள் ஐக்கிய முன்னணியே நியமிக்கும் என்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மக்களின் ஆணைக்கு விரோதமாக செயற்படுகின்றது பொ.ஐ.மு. அரசு!

## முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் விசனம்

கொழும்பு,ஒக்.3

அரசியல் அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்கு எதனையும் ஏற்றுக்கொள்ளலாம்; எவருடனும் இணைந்து கொள்ளலாம் என்ற நிலையில் இன்றைய அரசு உள்ளது. 1994 ஆம் ஆண்டு மக்கள் அளித்த ஆணைக்கு விரோதமான செயல்களில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு ஈடுபட்டுள்ளது.

இப்படிக் கூறியுள்ளார் முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.

தொழில்சார் நிபுணர்கள் நடத்திய கலந்துரையாடல் ஒன்றில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

இன்றைய அரசாங்கத்தின் போக்கு, 1994 இல் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கையுடன் முரண்பாடுடையது. இதனாலேயே நான் இன்றைய அமைச்சரவையில் இடம்பெற விரும்பவில்லை.

பிரயோகிக்கப்பட்ட அழுத்தம் காரணமாக 44 ஆகவிருந்த அமைச்சரவை 20 ஆகக் குறைக்கப்பட்டது. ஆனால் பதவியிழந்த எவரும் தத்தம் வாகனங்களையோ, அவற்றிற்கான எரிபொருள் ஒதுக்கீடுகளையோ, வதிவிடங்களையோ, ஊழியர்களையோ இழக்கவில்லை. இது முன்னைய நிலையைவிடவும் மோசமானது. பணிகள் எவற்றையும் நிறைவேற்றாமலே பதவிக்கான வசதிகளை மட்டும் தொடர்ந்தும் அனுபவிப்பது நியாயப்படுத்தப்படக்கூடியதல்ல.

ஆட்சிமுறையில் பொதுமக்கள் நம்பிக்கையிழப்பதைத் தடுத்து நிறுத துவதற்கு மக்கள் தம்மால் முடிந்த வரையான முயற்சிகளை மேற்கொள்ளுதல் வேண்டும். ஆட்சியதிகாரத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை உறுதுணையாகப் பேணும் உயர் நோக்கங்களைப் பிரயோகித்து ஓங்கச்செய்தல் வேண்டும்.

அரசமைப்புக்கான 17 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டிருப்பதால் திருப்திப்பட்டுவிட முடியாது. இதன் வெற்றியோ தோல்வியோ இதனை நிர்வகிக்கப்போகும் நபர்களின் ஆளுமையில் தங்கியிருக்கிறது. இதனால் உருவாக்கப்படவிருக்கும் நான்கு சுயாதீன ஆணைக்குழுக்களின் விடயத்திலும் இதுவே உண்மை - என்றார்.

தொழில்சார் நிபுணர்களின் கூட்டமைப்பை, 'ஐதே.க.வின் கூட்டமைப்பு' என அரசசார்பு ஊடகங்கள் விமர்சிப்பதை நான் ஒருதடவை அமைச்சரவையில் ஆட்சேபித்திருந்தேன் எனக் கூறிய அவர், தொழில் நிபுணர்கள் மத்தியில் ஒற்றுமையான செயற்பாடு தேவைப்படும் காலம் இது எனத் தெரிவித்தார்.

(க-3)

# வவுனியாவில் நகைக் கடையில் கொள்ளையிட்ட சிப்பாய் கைது!

வவுனியா,ஒக்.3

வவுனியா நகைக் கடையில் 'கிரனேட்'டைக் காட்டி சுமார் ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த தங்கநகைகளைக் கொள்ளையிட்ட இராணுவச் சிப்பாய் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது. கைதான இராணுவச் சிப்பாய் நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி பி.பண்டார தெரிவித்துள்ளார்.

கொள்ளையிட்ட நகைகள் அடங்கிய பெட்டிகளுடன் இராணுவச் சிப்பாய் கடையைவிட்டு ஓடிய சமயம் கடைச் சிப்பந்திகளும், பொதுமக்களும் துரத்தியுள்ளனர். அவ்வேளை அந்தச் சிப்பாய் தான் வைத்திருந்த 'கிரனேட்'டைக் காட்டி பயமுறுத்திபடியே தாண்டிக்குளம் பக்கமாகத் தப்பியோடிவிட்டார்.

பொலீஸாருக்குத் தகவல் கொடுத்ததையடுத்து பொலீஸார் விரைந்து சென்று அவரைக் கைது செய்தனர். அவரிடம் இருந்து நகைகளும் மீட்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 15ஆம் திகதிவரை குறிப்பிட்ட இராணுவச் சிப்பாயை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா மாவட்ட நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலீஸாரும், இராணுவப் பொலீஸாரும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (க-9)

## வெட்டுப் புள்ளியால் பாதிக்கப்பட்ட

# அனைத்துத்துறை மாணவர்களும் வெள்ளியன்று அமைச்சரைச் சந்திப்பர்

யாழ்ப்பாணம்,ஒக்.3

கடந்த வருடம் ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழக வெட்டுப்புள்ளியால் பாதிக்கப்பட்ட அனைத்துத்துறை மாணவர்களும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்திக்க விருக்கின்றனர்.

விசேட அனுமதியின் கீழ் முகாமைத்துவம், வர்த்தகம், உயிரியல், விஞ்ஞானம், பௌதிக விஞ்ஞானம், மருத்துவம், விவசாயம் ஆகிய பீடங்களில் உள்ள 290 வெற்றிடங்களுக்கு மாணவர்களை உள்வாங்கும் நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறு அமைச்சரிடம் கோர விருப்பதாக பாதிக்கப்பட்ட மாணவர்கள் தெரிவித்தனர்.

(க-3)

# சர்வதேச இந்துமத குருமார் ஒன்றிய கொழும்புக் கிளை அங்குரார்ப்பணம்

கொழும்பு முகத்துவாரம் சர்வசித்த சித்தி விநாயகர் ஆலய மண்டபத்தில் ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ கு.சோமசுந்தரக்குருக்கள் தலைமையில் சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் கொழும்புக்கான கிளை அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இவ்வைபவத்திற்கு இந்து சமய கலாசார அமைச்சின் மேலதிக செயலாளர் ந.பரஞ்சோதி, இந்து சமய ஆலோசகர் திருமதி யோகேந்திரா துரைச்சாமி, ஆலய தர்மகர்த்தா சபை சார்பாக கலாநிதி டாக்டர் ஏ.எஸ். குலசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் கண்டி, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களுக்கான பிரதிநிதிகளும் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் சர்வதேச இந்துமத குருபீடாதிபதி பிரம்மஸ்ரீ க.மகேஸ்வர சிவாச்சார்யார் ஆசியுடன் மணி விழாக காணும் சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தான பிரதமகுரு பிரம்மஸ்ரீ நா.சோமாஸ்கந்தக் குருக்கள், சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியம் சார்பாகவும் மஹா ஸ்ரீ வித்தியா சர்வதேச இந்துமத பீடம் சார்பாகவும் பொன்னாடை போர்த்து மலர் மாலை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டார். (க)

# மக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு 'தகுதிகாண்' அரசு தவறிவிட்டது

## ஐ.தே.க. பேச்சாளர் குற்றச்சாட்டு

கொழும்பு,ஒக்.3

நாடு எதிர்கொண்டுள்ள உடனடிப் பிரச்சினைகளைத் தீர்க்கும் விடயத்தில், அதனையே நோக்கமாகக் கொண்டு அமைக்கப்பட்ட 'தகுதிகாண்' அரசு தோற்றுவிட்டது என்று ஐ.தே.கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கருணா சேன கொடித்துவக்கு தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் ஐ.தே.க. நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இப்படிக் கூறினார்.

மின்சக்தி, சக்திவள அமைச்சர் திறமையற்றவர் என்று 'குற்றஞ்சாட்டப்பட்டிருந்தும், அவரே மீண்டும் அப்பொறுப்பில் 'தகுதிகாண்' அரசினால் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்றும் அவர் தெரிவித்தார்.

அரச நிறுவனங்கள் குழுவின் தலைவர் ஜோன் அமரதுங்க தெரிவிக்கையில், நாடாளுமன்றக் குழுவினால் குற்றம் செய்தவர்களாகத் தீர்[illegible]வர்களும், கடந்த ஏழு[illegible]களாக மின்சாரசபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் தலைவர்களாக இருந்தவர்களும் அந்தப் பதவிகளில் இருந்து அகற்றப்பட்டனரேயன்றி அவர்கள் மீது நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை எனக் கூறினார்.

மின்சார நெருக்கடி ஜனாதிபதியையும் அமைச்சரவையையும் பாதிக்காது. அவர்களுக்கு பிரத்தியேக மின்பிறப்பாக்கிகள் உள்ளன. சாதாரண மக்கள் மட்டுமே பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

முதலீட்டாளர்கள் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர். எட்டு மணிநேர மின்வெட்டு அமுல் செய்யப்படும் நாட்டுக்கு புதிய முதலீட்டாளர்களும் வருவதற்கு விரும்புவதில்லை. ஆடை, சிமெந்து, மட்பாண்டக் கைத்தொழில்துறை போன்றவை அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. இதற்கு ஜனாதிபதியும், அமைச்சரவையும் பொறுப்பேற்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(க-3)

### வீதியால் சென்ற பெண்ணின் சங்கிலி அறுப்பு!

யாழ்ப்பாணம்,ஒக்.3

கடையில் வேலை செய்யும் மகனுக்கு மத்தியானச் சாப்பாட்டைக் கொடுத்துவிட்டு வீடு திரும்பிய பெண்ணை ஒழுங்கையில் வழிமறித்த திருடன் ஒருவன் கழுத்தில் இருந்த சங்கிலியை அறுத்துக் கொண்டு தலைமறைவானான்.

மந்திகை 'மில்' ஒழுங்கையில் கடந்த சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இதுபற்றி பருத்தித்துறை பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க துன்னாலை கோயில்கடவைப் பகுதியில் அன்றைய தினம் இரவு ஒரு மணிக்கு கத்தி, பொல்லுகளுடன் ஒருவீட்டில் நுழைந்த முகமூடி அணிந்த கொள்ளைக் கோஷ்டி ஒன்று அவ்வீட்டில் இருந்தவர்களின் சங்கிலி, காப்பு போன்ற பெறுமதிமிக்க நகைகளைத் திருடிச் சென்றுள்ளது.

கொள்ளையர் வீட்டுக்காரரைக் கத்தியால் வெட்டியதில் அவர் காயமடைந்தார். (க-15)

### பாடசாலை மைதானத்தில் கைக்குண்டு!

கண்டி,ஒக்.3

புசல்லாவ நகரிலுள்ள சிங்களப் பாடசாலை ஒன்றுக்கு அருகில் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலை மாணவர்கள் மைதானத்தின் ஓரத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டை அவதானித்து அதிபருக்குத் தெரியப்படுத்தினர். அதிபர், புசல்லாவைப் பொலீஸாரை வரவழைத்து குண்டை அகற்றினார்.

(க-7)

# டாக்டர் தெய்வேந்திரன் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## யாழ். மேயர் ரவிராஜ் கூறுகின்றார்

யாழ்ப்பாணம்,ஒக்.3

"யாழ்.மாநகரசபையின் 'கிளினிக்'குகளில் தன்னிச்சையாகப் புகுந்து கடமையாற்றி வருகின்ற மாநகர சபையின் முன்னாள் சுகாதார வைத்திய அதிகாரி மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்."

- இப்படி யாழ். மாநகரசபையின் முதல்வர் என்.ரவிராஜ் அறிவித்துள்ளார்.

மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரியாக வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரால் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வந்த டாக்டர் இ. தெய்வேந்திரன் சில மாதங்களுக்கு முன்பு தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டார்.

இது தொடர்பாக அவர் ஆளுநரிடம் தொடர்பு கொண்டு தனது இடமாற்றத்தை இரத்துச் செய்யுமாறு கேட்டுக்கொண்டபோதும் ஆளுநர் அதனை இரத்துச் செய்யவில்லை.

இவ்வாறான நிலையில் தொடர்ந்தும் அவர் தன்னிச்சையாக மாநகர சபையின் 'கிளினிக்'குகளில் புகுந்து வேலை செய்து வருவது தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே இவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளோம்.

ஆளுநரால் நியமனம் செய்யப்பட்ட முன்னாள் சுகாதார வைத்திய அதிகாரி இ.தெய்வேந்திரனை இடமாற்றம் செய்ததும் ஆளுநர்தான். எனக்கு நியமனம் செய்யும் அதிகாரமோ அல்லது பதவி விலக்கும் அதிகாரமோ இல்லை.

தற்போது ஆளுநரால் நியமனம் செய்யப்பட்டுள்ள புதிய சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். மரியதாசனை அவரது கடமைகளைச் செய்யவிடாது தடுத்து வருகின்ற காரணத்தாலேயே டாக்டர் இ.தெய்வேந்திரன் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

- இப்படி அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-10)

# டாக்டர் தெய்வேந்திரன் விலகி இருப்பதற்கு முடிவு!

## தன் நிலையைத் தெளிவுபடுத்தி அறிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.3

"வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் நாயகம், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருக்கு அனுப்பப்பட்ட விளக்கக் கடிதங்களுக்கு தீர்வு வரும்வரை கடமையில் இருந்து விலகி இருக்க முடிவு செய்துள்ளேன்."

- வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரன் மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

அவர் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றிலேயே இப்படித் தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

1991 தொடக்கம் வடகிழக்கு மாகாண ஆளுநரினால் யாழ். மாநகரப் பகுதி சுகாதார வைத்திய அதிகாரியாக நியமிக்கப்பட்டு கடமையை செய்து வருகின்றேன். 1998 தொடக்கம் அப்பொழுது பிரதி முதல்வராகவும், பின் முதல்வராக இருந்து வருபவரினால் எனது தொழில் சார்ந்த கடமைகளை நேர்மையான முறையில் செய்ய முடியாதவாறு தடைகள் ஏற்படுத்தப்பட்டன. பலமுறை அவரை நேரில் சந்தித்தும், சபைக்கூட்டங்கள், சுகாதாரக் குழுக் கூட்டங்களில் பங்குபற்றியும் எனது கடமைகளுக்கு குந்தகம் விளைவிக்கும் நடவடிக்கைகளை விட்டு, நகர மக்கள் நலன்கருதி ஒத்துழைக்குமாறு வேண்டுகோள் விடுத்து வந்தேன். இது அவரினால் ஏற்றுக் கொள்ளப்படாமல் தனக்கு இசைந்துவரும் ஒரு பதிவு வைத்திய உத்தியோகத்தரை நியமனம் செய்து நடத்த எத்தனித்து வந்துள்ளார்.

இது சம்பந்தமாக எனது நிலைப்பாட்டைத் தெளிவாக கடந்த ஞாயிறு 30.09.2001 உதயன் பத்திரிகையில் மக்களின் நன்மைகருதி வெளியிட்டேன்.

இன்று (செவ்வாய்க்கிழமை) காலை 10.30 மணியளவில் கீரிப்பிள்ளையார் கோயிலடி மகப்பேற்று நிலையத்தில் கர்ப்பவதிகளுக்கான பரிசோதனைகளை நான் மேற்கொண்டிருந்தேன்.

அந்த நேரத்தில் தனது மெய்ப்பாதுகாப்பாளர்களான பொலீஸ் உத்தியோகத்தருடன் முதல்வர் நேராக பரிசோதனை அறைக்குள் புகுந்து என்னுடன் உரையாட முற்பட்டார். "காலை தொடக்கம் காத்திருக்கும் கர்ப்பவதிகளைப் பார்த்து விட்டு 15 நிமிடத்தில் வருகிறேன். சற்று அமர்ந்திருங்கள்" - என்று நான் கூறியும் அதைப் பொருட்படுத்தாமல் அவர் வந்தார்.

தான் நினைத்தபடி நியமித்தவர் தான் கர்ப்பவதிகளைப் பார்வையிட முடியும். தான் என்னை அனுமதிக்க முடியாது என கூறிவிட்டு பாதுகாப்பாளருடன் அவர் சென்றுவிட்டார். பொதுமக்கள் (கர்ப்பவதிகள்) மற்றும் ஊழியர்கள் முன் இவ்வாறு நடந்துள்ளது இனிமேல் நடவாதிருக்க வேண்டும்.

வடகிழக்கு மாகாண ஆளுநரிடம் மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் அனுப்பிய விளக்கக் கடிதங்களின் தீர்வுகள் வரும்வரை நான் எனது கடமைகளை செய்ய முடியாமல் இருக்கின்றது.

இதன்காரணமாக சுகாதாரப் பிரச்சினைகள் மேலும் உருவாகினால் அதற்கு நான் பொறுப்பல்ல என்பதைப் பொதுமக்களுக்கு அறியத்தருகின்றேன் - என்றுள்ளது. (உ-3)

### நவ.5 ஆம் திகதிவரை விளக்கமறியல்

கட்டுநாயக்கா விமானத்தளம் மீது இடம்பெற்ற தாக்குதல் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள 16 சந்தேக நபர்களையும் அடுத்த மாதம் 5 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீர்கொழும்பு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

மூன்று விமானப்படை அதிகாரிகள் உட்பட 16 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

(க-3)

## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் சிவஞானசுந்தரம்

(புகையிலை வியாபாரி)

மண்டைதீவு, 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சிவஞானசுந்தரம் நேற்று (02-10-2001) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - காசுபதி தம்பதியினரின் அன்பு மகனும், நேசமணியின் பாசமிகு கணவரும், சிவசேகரம் (ரூவின்ஸ் கட்டடக் கம்பனி, நல்லூர்), ஞானசேகரம் (ஆசிரியர், யாழ்.கனகரத்தினம் ம.ம.வி), சிவராகினிபத்மா ஆகியோரின் அன்புத் தந்தையும், வசந்தகுமார் (கௌரி தொழிலகம், யாழ்ப்பாணம்), வசந்தி, பொற்சிலை, ராம்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், மெக்சிபாரதா, ரூவின் பிரகாஷ், ரூபினி, விஜிதபாரத், விஜித் சரண்ஜா, லதாங்கி, கிசோக்குமார் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.10.2001) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி செம்பாடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

*பதிவாளர் ஒழுங்கை,*
*தலங்காவல் பிள்ளையார் கோயிலடி,*
*திருநெல்வேலி.*

சி.ஞானசேகரம் (மகன்)
(ஆசிரியர்,
யா/கனகரத்தினம் ம.ம.வி.)

(92918)

# பங்களாதேஷ் பொதுத் தேர்தலில் பேகம் கலிதாவின் கட்சி வெற்றி!

## அறுதிப்பெரும்பான்மை பெற்றது

டாக்கா,ஒக்.3

பங்களாதேஷ் நாடாளுமன்றத் தேர்தலில் பேகம் கலிதா ஷியா தலைமையிலான கூட்டணி அறுதிப் பெரும்பான்மை வெற்றியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. அடுத்த பிரதமராகப் பேகம் கலிதா ஷியா பதவியேற்பது உத்தியோகப்பற்றற்று உறுதியாகிவிட்டது.

கடந்த திங்கட்கிழமை நடந்த வாக்களிப்பையடுத்து, நேற்று வாக்குகளை எண்ணும் பணிகள் ஆரம்பமாகின. 300 ஆசனங்களைக்கொண்ட நாடாளுமன்றத்துக்கான தேர்தலின் வாக்கு எண்ணிக்கையின் போது பேகம் கலிதா ஷியாவின் பங்களாதேஷ் தேசியக் கட்சி தலைமையிலான கூட்டணி தொடக்கம் முதல் முன்னணி வகித்தது.

முனனாள் பிரதமர் ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் இத்தேர்தலில் 36 இடங்களை மட்டும் பெற்றுப் படுதோல்வியைச் சந்தித்துள்ளது.



ஷேக் ஹசீனா 5 தொகுதிகளில் போட்டியிட்டு, ஒரு தொகுதியில் மட்டுமே வெற்றிபெற்றார். அவரது கடந்த அரசில் அமைச்சர்களாக இருந்தவர்கள பலரும் தோற்றுவிட்டனர்.

பங்களாதேஷின் முன்னாள் சர்வாதிகாரி எச்.எம்.எர்ஷாத் புதிதாக ஆரம்பித்த கூட்டணி 13 தொகுதிகளில் மட்டுமே வென்றது.

இதுவரை காலமும் எதிர்க்கட்சியாக இருந்த பங்களாதேஷ் தேசியக் கட்சியின் தலைவி பேகம் கலிதா ஷியா பிரதமராவது உறுதியாகிவிட்டதாகவும் -

பங்களாதேஷ் தேர்தல் ஆணையத்தின் உத்தியோகபூர்வ அறிவிப்புக்காகவே அவர் தற்போது காத்திருப்பதாகவும் -

அவரது ஆதரவாளர்கள் டாக்கா வீதிகளில் மகிழ்ச்சிக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டிருப்பதாகவும் - கூறப்படுகிறது.

(ஒ)

# பதிலடி தவறாகிவிடாதிருப்பதில் அமெரிக்க அதிபர் அதிக அக்கறை

## அதனாலேயே நடவடிக்கை தாமதமாம்

அமெரிக்காவில் இடம்பெற்ற விமானத் தற்கொலைத் தாக்குதல்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் தவறாகிவிடக்கூடாதென்பதில், அமெரிக்க அதிபர் புஷ் அதிககவனம் செலுத்தி வருவதாகவும் -

இதனாலேயே இஸ்லாமியத் தீவிரவாதி ஒஸாமா பின்லேடன் மற்றும் அவரது ஆதரவாளர்களின் நிலைகள் மீது தாக்குதல்களை நடத்த அமெரிக்கா தாமதித்து வருவதாகவும்-

இராணுவ ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அமெரிக்க மண்ணில் தீவிரவாதிகள் தாக்குதல்களை நடத்திய சில நாள்களிலேயே அமெரிக்கா பதிலடி கொடுக்கும் என்று எதிர்பார்த்த போதும், இதுவரை அத்தகைய நடவடிக்கைக்கான முன்னேற்பாடுகளை மட்டுமே அமெரிக்கா மேற்கொண்டு வருகிறது.

பின்லேடனின் இருப்பிடம் குறித்த உளவுத் தகவல்களைத் திரட்டுவதே முதற்பணி என்று அமெரிக்கப் பாதுகாப்புத்துறை கருதுவதாகக் கூறப்படுகிறது.

முன்னர் கென்யா மற்றும் தன்சானியா ஆகிய நாடுகளில் அமெரிக்கத் தூதரகங்கள்மீது, பின்லேடன் நடத்தியதாகக் கூறப்படும் வெடிகுண்டுத் தாக்குதல்களையடுத்து அபபோதைய அதிபர் பில்கிளின்ரன் அரசு, ஆப்கானிஸ்தான் மீது "குரூஸ்" ஏவுகணைகளைப் பயன்படுத்தித் தாக்குதல் நடத்தியது.

அந்தத் தாக்குதல்களில், அப்பாவி மக்கள் பாதிப்படைந்ததுடன், தவறான நிலைகளே சேதமடைந்ததாகவும் கூறப்பட்டது.

அத்தகைய தவறுகள் தற்போது நிகழ்ந்துவிடக்கூடாதென்பதில் அதிபர் புஷ் அதிக அக்கறை செலுத்துவதாலேயே பதிலடி நடவடிக்கை தாமதமாவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-4)

### அமெரிக்காவின் ஆதரவுடன்

# தலிபான் எதிர்ப்பு சக்திகள் மாற்றரசு அமைக்க இணக்கம்

ரோம்,ஒக்.3

ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் மாற்று அரசு ஒன்றை அமைப்பது தொடர்பாக ஆளும் தலிபான்களுக்கு எதிரான சக்திகள் இணக்கம் கண்டுள்ளன.

ஆப்கானிஸ்தானிய முன்னாள் மன்னர் ஷாதிர்ஷா தலிபான்களை எதிர்த்துப் போராடிவரும் வடக்குக் கூட்டணியினருடன், ரோம் நகரில் நடத்திய பேச்சின் முடிவில் நேற்று முன்தினம் இந்த இணக்கப்பாடு ஏற்பட்டது.

ஆப்கான் பழங்குடி இனங்களை ஒன்றிணைக்கும், மீலாத்-இர்கா என்ற மன்றம் உருவாக்கப்படும் என்றும்-

பின்னர் அந்த மன்றம் 'அரசுத் தலைவர் ஒருவரையும், இடைக்கால அரசு ஒன்றையும் தெரிவு செய்யும்

உலக அரங்கில்

என்றும் -

இரண்டு தரப்பும் சேர்ந்து வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

முன்னாள் மன்னர், தற்போது வாழ்ந்துவரும் ரோம் நகரில் பல நாள்களாக, இரு தரப்பும் பேச்சு நடத்தின.

இந்தப் பேச்சில் அமெரிக்கக் காங்கிரஸின் தூதுக்குழு ஒன்றும் கலந்து கொண்டது.

இதேவேளை -

ஆப்கானிஸ்தானின் ஆளும் தலிபான்கள் மீது நேரடியாக இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளாப் பின்னடித்து வரும் அமெரிக்கா, முன்னாள மன்னர் மற்றும் வடக்குக் கூட்டணியை முன்நிறுத்தித் தனது எண்ணத்தை நிறைவேற்றத் திட்டமிடுவதாக அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

ஆயினும் முன்னாள் மன்னருக்கும் வடக்குக் கூட்டணியினருக்கும் இடையிலான ஒற்றுமை நீண்ட காலம் நீடிப்பது குறித்தும் அவர்கள் சந்தேகம் எழுப்பியுள்ளனர்.

(ஒ-4)

# இரசாயன ஆயுத தயாரிப்பில் ஈராக் அதிபர் சதாம் தீவிரமாம்

லண்டன்,ஒக்.3

இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்களைத் தயாரிப்பது தொடர்பான ஆராய்ச்சிகளை தீவிரப்படுத்துமாறு தனது விஞ்ஞானிகளுக்கு ஈராக் அதிபர் சதாம் ஹுஸைன் உத்தரவிட்டிருப்பதாக அங்கிருந்து தப்பிவந்த விஞ்ஞானி ஒருவர் கூறியதாக பிரிட்டிஷ் பத்திரிகையான 'சண்டே டெலிகிராப்' தெரிவித்தது.

தன்னை இனங்காட்ட விரும்பாத அந்த விஞ்ஞானி - கிருமிகள், இரசாயனங்கள் மற்றும் நரம்பு மண்டலத்தைத் தாக்கும் வாயுக்கள் ஆகியவை தொடர்பாக ஈராக்கிய விஞ்ஞானிகள் ஆராய்வதாகவும் -

இவற்றை ஏவுகணைகள், ஆளில்லாத விமானங்கள் மூலம் எதிர்த்தரப்பினரின் பிரதேசங்களில் காற்று, குடிதண்ணீர், மண்ணில் பரப்புவதற்கு ஈராக் திட்டமிடுவதாகவும் - தெரிவித்ததாக பிரிட்டிஷ் பத்திரிகை மேலும் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை ஈராக்மீது தாக்குதல் நடத்துவதற்கு வசதியாக, இஸ்ரேல் மற்றும் மேற்குலக உளவு அமைப்புக்கள் மேற்கொள்ளும் பிரசாரத் தந்திரமே இந்த இரசாயன ஆயுத அச்சுறுத்தல் கதை என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

(ஒ)

## பாகிஸ்தான் மீதான கனடாவின் தடைகள் நீக்கம்

ரொறன்ரோ,ஒக்.3

பாகிஸ்தான்மீது தான் நடைமுறைப்படுத்திய தடைகளை நீக்குவதுடன், பாகிஸ்தான் செலுத்தவேண்டிய 283 மில்லியன் டொலர்கள் கடனை ரத்துச் செய்வதென்று கனடா தீர்மானித்துள்ளதாக கனேடிய வெளிவிகார அமைச்சர் ஜோன் மில்ஸ் தெரிவித்துள்ளார்.

சர்வதேச பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு பாகிஸ்தான் ஆதரவுதர முன்வந்ததை அடுத்தே கனடா இந்த முடிவுகளை எடுத்ததாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

(ஒ-4)

## தீவிரவாதிகள் மீது நடவடிக்கை

செச்சினிய தீவிரவாதிகள் மீது ரஷ்ய இராணுவத்தினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் புதிய இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். பேச்சு நடத்த செச்சினியத் தீவிரவாதிகளுக்கு ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் அழைப்பு விடுத்த சில நாள்களிலேயே இந்த படை நடவடிக்கை தொடங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## 'பமீர்' மலையில் பின்லேடன் தலைமறைவு

இஸ்லாமாபாத்,ஒக்.3

இஸ்லாமியத் தீவிரவாதி ஒசாமா பின்லேடன் ஆப்கானிஸ்தானின் வடகிழக்குப் பகுதியில் அமைந்துள்ள 'பமீர்' மலைப் பிரதேசத்தில் மறைந்திருப்பதாக இஸ்லாமாபாத் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

செயற்கைக் கோள் புகைப்படங்கள் மற்றும் தனியார் கொடுத்த தகவல்கள் ஆகியவற்றின் அடிப்படையாகக்கொண்டே இது கண்டறியப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## காஷ்மீர் சட்ட சபைத் தாக்குதல்:

# பாகிஸ்தான் மீது இந்தியா பாய்ச்சல்

புதுடில்லி,ஒக்.3

காஷ்மீர் சட்டசபைக் கட்டடம் மீது தீவிரவாதிகள் நேற்றுமுன்தினம் நடத்திய தற்கொலைத் தாக்குதலுக்கு, பாகிஸ்தானே காரணம் என்று இந்தியா குற்றஞ்சாட்டியுள்ளது.

தீவிரவாதத்துக்கு உதவி புரிவதையும், அதனைத் தூண்டி விடுவதையும் பாகிஸ்தான் உடனடியாக நிறுத்திவிடவேண்டும் என்றும் -

இது பாகிஸ்தானுக்கு விடப்படும் இறுதி எச்சரிக்கை என்றும் -

இந்திய உள்துறை அமைச்சகம் விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையில் காஷ்மீர் சட்டசபை மீதான தாக்குதலுக்கு பொறுப்பேற்றுள்ள 'ஜெய்ஸி மொஹமட்' என்ற காஷ்மீரத் தீவிரவாத அமைப்பு பாகிஸ்தானின் பெஷாவரைச் சேர்ந்த பதாகத் உசேன் என்ற தீவிரவாதி தலைமையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறியுள்ளது.

தாக்குதல் இடம்பெற்ற சில நிமிடங்களில் அதற்குப் பொறுப்பேற்பதாக 'ஜெய்ஸி மொஹமட்' அமைப்பின் பாகிஸ்தானிய அலுவலகம் தெரிவித்தது.

மற்றொரு காஷ்மீரத் தீவிரவாத இயக்கமான 'ஹர்கதுல் முஜாஹிதீன்' என்ற அமைப்பை பாகிஸ்தான் சமீபத்தில் தடை செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ-4)

# காஷ்மீர் தற்கொலைத் தாக்குதலில் உயிரிழப்பு 37 ஆக அதிகரித்தது

ஸ்ரீநகர்,ஒக்.3

காஷ்மீர் சட்டசபை கட்டடத்தின் மீது தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 37ஆக அதிகரித்துள்ளது.

8பாதுகாப்புப் படையினர், 4தீவிரவாதிகள், 8சட்டசபை அலுவலர்கள், வேறு திணைக்களங்களின் பணியாளர்கள் மூவர் ஆகியோர் உயிரிழந்தவர்களில் அடங்குவர்.

இவர்களைத் தவிர மற்றவர்கள் சாதாரண பொதுமக்களாவார்கள்.

தாக்குதல் இடம்பெறுவதற்கு சிறிது நேரம் முன்னரேயே சட்டசபைக் கூட்டம் முடிவடைந்து முதல்வர் பரூக் அப்துல்லா உட்பட உறுப்பினர்கள் அங்கிருந்து வெளியேறியதாகவும் -

அதனால் சட்டமன்ற உறுப்பினர்கள் எவரும் உயிரிழக்கவில்லை என்றும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)



இந்தியாவின் காஷ்மீர் மாநில சட்ட சபை மீது நேற்று முன் தினம் தீவிரவாதிகள் நடத்திய கார் தற்கொலைத் தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட 'டாடா சுமோ' கார் உருக்குலைந்து கிடக்கும் காட்சி.

# பயங்கரவாதத்துக்கு எதிரான ஐ.நா. பாதுகாப்புச்சபை விவாதம்

அமெரிக்காவில் இடம்பெற்ற விமானத் தற்கொலைத் தாக்குதல்களைத தொடர்ந்து, பயங்கரவாதத்துக்கு எதிரான அனைத்துலக நடவடிக்கை குறித்து ஐ.நா.பாதுகாப்புச் சபையின் ஒருவாரகால விவாதம் கடந்த ஞாயிறன்று நியூயோர்க்கில் தொடங்கியது.

நாடுகள் அனைத்தும், பயங்கரவாதிகளுக்கு நிதி கிடைக்கும் வழிகளைத் துண்டிக்கவேண்டும் என்றும் -

பயங்கரவாதிகளுக்கு அல்லது அவர்களது ஆதரவாளர்களுக்கு புகலிடம் அளிப்பதை நிறுத்தவேண்டும் என்றும் - வலியுறுத்தும் தீர்மானத்தை கடந்த வெள்ளிக்கிழமை ஐ.நா.பாதுகாப்புச் சபை நிறைவேற்றியதைத் தொடர்ந்தே, தற்போதைய விவாதம் இடம்பெறுகிறது.

பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளை மேலும் தீவிரப்படுத்துவது குறித்து நடத்தப்படும் இந்த விவாதத்தில், அமெரிக்கா உட்பட மேலை நாடுகளுக்கு நெருடலைத தரும் பல விடயங்கள் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

(ஒ-4)

## மதப்பிரசாரக் குற்றஞ்சாட்டப்பட்ட

# 8 வெளிநாட்டவரின் சட்டத்தரணி ஆப்கானிஸ்தானுக்குச் சென்றார்

இஸ்லாமபாத்,ஒக்.3

ஆப்கானிஸ்தானில் கிறிஸ்தவ மதத்தைப் பரப்ப முயன்ற குற்றச்சாட்டின் கீழ் தலிபான்களால் கைதுசெய்யப்பட்டுள்ள 8 வெளிநாட்டவர்கள் மீதான வழக்குகளில் ஆஜராவதற்காக, அவர்களது சட்டத்தரணி காபூல் சென்றடைந்துள்ளதாக பாகிஸ்தானியச் செய்திகள் தெரிவித்தன.

இந்த வாரத் தொடக்கத்தில் 8 வெளிநாட்டவர்கள் மீதான வழக்கின் விசாரணைகள் ஆரம்பமாகுமென்று தலிபான் அரசின் வெளிவிவகார அமைச்சு தெரிவித்ததாகவும் -

இதனையடுத்து 8 வெளிநாட்டவர்கள் சார்பில் ஆஜராகும் சட்டத்தரணி காபூலுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளதாகவும் - ஜேர்மனிய இராஜதந்திரியான ஹெல்மட் லென்டெஸ் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானில் உதவிப் பணிகளை மேற்கொண்டிருந்த 'ஷெல்டர் இன்டர்நஷனல்' என்ற ஜேர்மனிய தொண்டு அமைப்பின் - இரு அமெரிக்கர்கள், இரு அவுஸ்திரேலியர்கள், 4 ஜேர்மனியர்கள் அடங்கிய - 8 பணியாளர்களையும், அவர்களது 16 ஆப்கானிஸ்தானிய உதவியாளர்களையும் கிறிஸ்தவத்தைப் பரப்பியதற்காக தலிபான் அரசு கைதுசெய்தது தெரிந்ததே.

(ஒ)

## ஆப்கானிஸ்தானில் 6பேர் கைது!

காபூல்,ஒக்.3

ஆப்கானிஸ்தானின் முன்னாள் மன்னர் ஷாஹிர் ஷாவுக்கு ஆதரவான துண்டுப் பிரசுரங்களை விநியோகிதத குற்றச்சாட்டின் பேரில் 6 பேரை தலிபான் அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

(ம-9)

# யாழ். மாநகரப் பகுதியில் மலேரியா பரவும் ஆபத்து

## சுகாதார வைத்திய அதிகாரி எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 3
தற்போது ஆரம்பித்திருக்கும் மழையினால் யாழ். மாநகரசபையின் சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மலேரியா மற்றும் வயிற்றோட்டம் ஆகிய நோய்கள் பரவும் அபாயம் காணப்படுவதாக யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். தெய்வேந்திரன் தெரிவித்துள்ளார்.

தமது சுகாதாரப் பிரிவில் இரத்தப் பரிசோதனை மேற்கொள்வதற்காக 'யுனிசெவ்' நிறுவனத்தினால் வழங்கப்பட்ட 10 நுணுக்குக் காட்டிகளும் பயன்படுத்தப்படாமல் முடங்கிக் கிடப்பதாலேயே இந்த நிலை ஏற்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த வருட முற்பகுதியில் இருந்து இந்த வருடம் மார்ச் மாதம் வரை அந்த நுணுக்குக் காட்டிகளைச் சிறந்த முறையில் பயன்படுத்தி இரத்தப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இதனால் நோய்களை ஆரம்பத்திலேயே இனங்கண்டு அதற்குரிய ஆலோசனைகளை வழங்க முடிந்தது.

இதனால் மேற்குறித்த காலப் பகுதியில் யாழ். மாநகர சபைக்குட்பட்ட இடங்களில் மலேரியா, வயிற்றோட்டம் மற்றும் தொற்று நோய்கள் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் கடந்த மார்ச் மாதம் முதல் இந்தப் 10 நுணுக்குக் காட்டிகளும் யாழ். மாநகரசபை நிர்வாகத்தால் பொறுப்பேற்கப்பட்டுப் பயன்பாட்டிற்கு விடப்படாமல் முடக்கி வைக்கப்பட்டிருக்கின்றன.

தற்போது மழைகாலம் ஆரம்பித்திருப்பதனால் மலேரியா போன்ற தொற்று நோய்கள் பரவும் ஆபத்து நிலவுகிறது. நுணுக்குக் காட்டிகள் உடனடியாகப் பயன்பாட்டிற்கு விடப்படாமல் இருந்தால் இந்த நோய்களைக் கட்டுப்படுத்த முடியாது.

—இவ்வாறு டாக்டர் தெய்வேந்திரன் மேலும் தெரிவித்தார். (ம-4)

---

யாழ். நகர் மக்கள் தலைவரின்

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் S. T. தர்மலிங்கம்

— அகில இலங்கை சமாதான நீதிவான் —

(யாழ். மாவட்ட ஸ்ரீ. ல சு. கட்சி முன்னாள் தலைவரும், பிரபல லேக் ஹவுஸ் பத்திரிகையின் யாழ். விநியோகஸ்தரும்)

மலர்வு 01—06—1940 உதிர்வு 03—10—1997

01-01-1996ஆம் ஆண்டு யாழ். நகர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைப் புனரமைப்புச் செய்தபோது அன்றைய போர்க்காலச் சூழலில் அமரர் S. T. தர்மலிங்கம் அவர்கள் இக்கட்சியின் யாழ். நகர் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இரு வருடங்களாக யாழ். மக்களுக்கு அரும்பெருஞ் சேவையாற்றிக் கொண்டிருந்தபோது அவர் இனந்தெரியாதவர்களால் பரிதாபகரமாகப் படுகொலை செய்யப்பட்டார். அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

### நினைவஞ்சலிக் கூட்டம்

அன்னாரின் நான்காவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு அவரது ஞாபகார்த்த நினைவஞ்சலிக் கூட்டம் இன்று (03-10-2001) புதன்கிழமை காலை 10. 00 மணியளவில் உபதலைவர் உயர்திரு. R. சௌந்தரநாயகம் அவர்களின் தலைமையில் யாழ். நகர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பணிமனையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பொதுமக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு இருகரங்கூப்பி அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி!

- நிர்வாகம்,
ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பு,
யாழ். மாவட்டம்.

183, முதலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (92854)

---

## பகிஷ்கரிப்பில் இறங்கப்போவதாக எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 3
யாழ். வலயத்திலிருந்து இடமாற்றப்பட்ட 12 ஆசிரியர்களின் இடமாற்றங்களை உடனடியாக ரத்துச் செய்யாவிடில் பகிஷ்கரிப்பில் இறங்கப் போவதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

இந்த 12 ஆசிரியர்களின் இடமாற்றங்களும் எதிர்வரும் உலக ஆசிரிய தினத்திற்கு முன்னர் ரத்துச் செய்யப்படாவிட்டால் அன்றைய தினமே பகிஷ்கரிப்பில் இறங்கப் போவதாக சங்கம் அறிவித்துள்ளது (ம-182)

## முன்பள்ளி விளையாட்டு

யாழ்ப்பாணம், ஒக். 3
மாவிட்டபுரம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் நடத்தப்படும் ஆதவன் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 2 30 மணிக்கு முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன்ஜோண்சன் கலந்துகொள்வார். கௌரவ விருந்தினராக சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் நா. வேதநாயகம் கலந்து கொள்வார்.

(ம-ரி)

## சிறுவர் தின விழா

காரைநகர், ஒக். 3
ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்தினால் நடத்தப்படும் சிறுவர் தின விழா நாளை வியாழக்கிழமை முற்பகல் 10. மணிக்கு காரைநகர் கலாநிதி ஆ தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் நடராசா மண்டபத்தில், ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் ஜே. எக்ஸ் செல்வநாயகம் தலைமையில் நடைபெற உள்ளது.

பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக சிறுவர் பாதுகாப்பு நிதிய நிகழ்ச்சித் திட்ட அலுவலர் திருமதி ஜி. அல்பிறட்டும் கௌரவ விருந்தினர்களாக யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் ந. பரமசிவம், தியாகராசா ம. ம. வித்தியாலய அதிபர் சு. வேலாயுதபிள்ளை, ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவர் ந. மதனராசா ஆகியோரும் கலந்துகொள்ள உள்ளனர்.

சிறுவர் தினம் தொடர்பாகப் பாடசாலை மட்டங்களில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு இந்த நிகழ்வில் பரிசில் வழங்கப்படும். பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (ம-73)

---

## யாழ்ப்பாண மாணவர் குழு தெற்குக்கு கல்விச் சுற்றுலா

யாழ்ப்பாணம், ஒக். 3
யாழ். மாவட்ட மாணவ, மாணவிகள் கல்விச் சுற்றுலா ஒன்றினை மேற்கொண்டு நேற்று 'சிற்றி ஓவ் றிங்கோ' கப்பல்மூலம் திருகோணமலைக்குப் பயணமானார்கள்.

இம் மாணவர் குழு, திருகோணமலை, கண்டி, நுவரெலியா, கதிர்காமம், சீதாஎரியா, சிகிரியா, கொழும்பு ஆகிய இடங்களிலுள்ள முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பார்வையிடும்.

சுமார் 70 மாணவ, மாணவிகள் இக்குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

மக்கள் நலன் காக்கும் பிரிவும், படையணியும் என்ற அமைப்பு இப் பயணத்திற்கான ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தது. (ம-182)

---

காரைநகர்ப் பகுதியில்

## காலபோக நெற்செய்கையில் விவசாயிகள் ஆர்வமில்லை

காரைநகர், ஒக் 3
காரைநகர்ப் பகுதி இம்முறை காலபோக நெற்செய்கைக்கான நடவடிக்கைகள் மந்தகதியிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த ஆண்டு மழை இன்மையால் இங்கு ஆயிரத்து 200 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் செய்கை பண்ணப்பட்ட நெற்பயிர்கள் அழிவடைந்திருந்தன. இதனால் இப்பகுதியில் இம்முறை விதை நெல்லுக்கு பெருந்தட்டுப்பாடு நிலவுவதுடன் ஒரு புசல் விதை நெல் ரூபா 850 தொடக்கம் ரூபா ஆயிரம் வரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இக்காரணங்களால் இம்முறை காலபோகச் செய்கையில் விவசாயிகள் ஆர்வங் காட்டவில்லை.

இதேவேளை—
காரைநகர்ப் பகுதியில் விவசாயக் கூலி ஆள்களுக்கும் பெருந் தட்டுப்பாடு நிலவுகின்றது. அத்துடன் விவசாய பாதுகாப்பு வேலிகளைச் செப்பனிடும் பணிகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

இம்முறை விவசாய நடவடிக்கைகளில் மக்களின் ஆர்வம் மிகவும் குறைவடைவதற்கு இவையும் காரணங்கள் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. (ம-73)

## மாடுகள் திருடிய கோஷ்டியினர் சிக்கினர்

அச்சுவேலி, ஒக். 3
நீர்வேலிப் பகுதியில் மாடுகளைத் திருடிவந்த கோஷ்டியினர் கிராமசேவையாளர்களின் தீவிர முயற்சியினால் பிடிக்கப்பட்டனர். இவர்கள் திருடியதாகக் கூறப்படும் மாடுகளில் மூன்று உயிருடன் மீட்கப்பட்டன.

நீர்வேலிப் பகுதியில் அண்மைக் காலத்தில் அடுத்தடுத்து மாடுகள் திருடப்பட்டு வந்தன தரவைப்பகுதியில் மேய்ச்சலுக்குக் கட்டப்படும் மாடுகளும்கூடப் பட்டப்பகலிலேயே திருடர்களால் அவிழ்த்துச் செல்லப்பட்டன.

இதனால் கால்நடை வளர்ப்போர் கவலை அடைந்திருந்ததுடன், அவ்வப்பொது கிராமசேவகர்களிடம் புகார் செய்திருந்தனர்.

இது தொடர்பாகக் கோப்பாய்—நீர்வேலிக் கிராம சேவையாளர்கள் மேற்கொண்டுவந்த தீவிர முயற்சியினால் திருடர் கோஷ்டி பிடிக்கப்பட்டது.

விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. இந்த விசாரணைகளின்போது நீர்வேலி—கோப்பாய்ப் பகுதியில் நடைபெற்ற கால்நடைத் திருட்டுக்கள் பல அம்பலத்திற்கு வரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (க-11)

## தளபாடங்கள் செய்வதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 3
தற்போது புனரமைப்புச் செய்யப்பட்டுவரும் யாழ்ப்பாணம் பொதுநூலகத்தின் பயன்பாட்டுக்குத் தேவையான தளபாடங்கள் அனைத்தையும் யாழ். மாநகரசபையின் வேலைத் தளத்திலேயே தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ். மாநகர சபை ஆணையாளர் இ. இராமலிங்கம் தெரிவித்தார். (ம-ரி)

## குடும்பநல உதவியாளர்களுக்கு சீருடைதுணி வழங்கப்படவில்லை

யாழ். மாநகர சபையில் கடமையாற்றும் குடும்பநல உதவியாளர்களுக்கான சீருடைத் துணிகள் இரண்டு வருடங்களாக வழங்கப்படவில்லை.

குடும்பநல உதவியாளர்கள் கடந்த பங்குனி மாதம் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட சமயத்திலும் மேற்படி கோரிக்கையை முன்வைத்திருந்தனர்.

இவற்றை நிறைவேற்றுவதாக மாநகரசபை நிர்வாகம் உறுதி கூறிய போதிலும், சீருடைத் துணிகளை வழங்குவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று சம்பந்தப்பட்ட ஊழியர்கள் விசனம் தெரிவித்துள்ளார்கள்.

தமக்கு வழங்கப்பட்ட ஏனைய கோரிக்கைகளும் நிறைவேற்றப்படும் என்பதிலும் சந்தேகம் காணப்படுகின்றது எனவும் ஊழியர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(ம-86)

## கணனி விரிவுரை இன்று ஆரம்பம்

யாழ். வலயக் கல்விப் பணிமனையின் அனுசரணையுடன் புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி நடத்தும் கணனிப் பயிற்சி நெறிக்கான விரிவுரைகள் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.45 மணிக்கு ஆரம்பமாக உள்ளன. இப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்த மாணவர் அனைவரையும் இன்று தவறாது சமுகம் தரும்படி கல்லூரி அதிபர் கேட்டுள்ளார். (ம-ரி)

## பாடசாலைக்கு தண்ணீர்த் தாங்கி அமைப்பு

அச்சுவேலி மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவுக்கு கல்லூரி பழைய மாணவர்களின் நிதி உதவி மூலம் தண்ணீர்த் தாங்கி ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

வித்தியாலயத்தின் கனடா வாழ் பழைய மாணவர்கள் இந்தத் தண்ணீர் தாங்கி நிறுவுவதற்கான நிதி உதவியை வழங்கி உதவியுள்ளனர். (ம-11)

உதயன்

## 'ஒற்றுமை முன்னணி' அர்த்தமுள்ளதாக....!

சில தமிழ்க்கட்சிகளை உள்ளடக்கி 'ஒற்றுமை முன்னணி' ஒன்றினை உருவாக்கும் முயற்சியில் ரெலோ அமைப்பு ஈடுபட்டுள்ளதாக அந்தக் கட்சியின் முதல்வர் என்.ஸ்ரீகாந்தா அறிவித்திருக்கின்றார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ் அணி ஆகியவற்றை ஒன்றிணைத்துச் செயற்படுவதே தங்கள் நோக்கம் என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

நல்லதொரு முயற்சி; வரவேற்கத்தக்கது.

ஈழத்தமிழரின் இன்றைய அவல நிலைக்கு நமக்குள் ஒற்றுமை இல்லாதிருப்பதே முக்கிய காரணம் என்பது காலம் காலமாய் நமது மக்கள் உணர்ந்து விசனத்துடன் கூறி வந்த உண்மை.

பதவிகளுக்காகவும், பணத்துக்காகவும், குறுக்கு வழியில் செல்வாக்கு மற்றும் அதிகாரத்தைப் பெறவும் நமது தலைவர்கள் ஒற்றுமையைக் குலைத்து காலத்துக்குக் காலம் போட்ட வேடங்களும், குத்துக்கரணங்களும்தான் இன்றைய எமது இழி நிலைக்கு முக்கிய காரணம்.

இப்போது விடுதலைப் போராட்டத்தின் எழுச்சிக்கு அனுசரணையாகச் செயற்படுவதற்கு ஜனநாயக ரீதியில் 'ஒற்றுமை முன்னணி' அவசியம் என்பதை உணர்ந்து அதை அமைக்கும் முயற்சியில் தாம் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாக ரெலோ முதல்வர் கூறுகின்றார்.

விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் விடுதலைப் புலிகள் தங்கள் இலக்கிலும், முடிவிலும் தீர்க்கமாக இருக்கின்றார்கள். அவர்களது குறிக்கோள் மாற்ற முடியாததொன்று.

அதற்கு உதவுவதற்கு முயலும் தமிழ்க் கட்சிகள் தங்களின் பொறுப்பையும் கடமையையும் உணர்ந்து செயலாற்ற வேண்டும்.

'ஒற்றுமை முன்னணி' அமைக்க முன்வருவோர் அதை சரிவர உணர்ந்து செயற்பட்டால்தான் ஒற்றுமை முன்னணி அர்த்தமுள்ளதாக - பலன் தருவதாக - அமையமுடியும்.

இது விடயத்தில் ரெலோ ஸ்ரீகாந்தா கூறும் கருத்து, அவர் இந்த ஒற்றுமை முன்னணியின் தாற்பரியத்தை, அதற்கு வகுக்கப்படவேண்டிய இலக்கைப் புரிந்து கொண்டிருக்கின்றார் என்பதையும் காட்டுகின்றது.

விடுதலைப் போராட்டத்தின் எழுச்சிக்கு அனுசரணையாகச் செயற்பட ஜனநாயக ரீதியில் 'ஒற்றுமை முன்னணி' அவசியம் என்ற அவரது கூற்று, அவர் தமிழ்க் கட்சிகளின் கடமையை நன்கு உணர்ந்திருப்பதையே எடுத்துக் காட்டுகின்றது.

'ஒற்றுமை முன்னணி'யில் அவர் இணைக்க முயலும் தமிழர் விடுதலைக் கூட்டணியும், தமிழ்க் காங்கிரஸும் முழுக்க முழுக்க ஜனநாயகக் கட்சிகள். எந்தக் காலத்திலும் அவை ஆயுதம் ஏந்திப் போராடவில்லை.

ஆனால் ஸ்ரீகாந்தாவின் ரெலோவும், அவர் 'ஒற்றுமை முன்னணி'யில் இணைத்துக்கொள்ள முயலும் சுரேஷ் அணியும் முன்னர் ஆயுதம் தாங்கிய இயக்கங்களாகச் செயற்பட்டவை; இப்போது ஜனநாயக வழிக்குத் திரும்பியுள்ளதாகக் கூறிக்கொள்பவை.

தமிழர் கூட்டணி, தமிழ்க் காங்கிரஸ போன்ற ஜனநாயகக் கட்சிகள் 'ஒற்றுமை முன்னணி' என்ற பெயரில் இந்த இரு அணிகளுடனும் இணைந்து செயற்படுவதாயின் அதற்கு இந்த இரு அணிகளும் முதலில் தங்களின் ஜனநாயகப் பாதையை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

"விடுதலைப் போராட்டத்தின் எழுச்சிக்கு அனுசரணையாக ஜனநாயக ரீதியில் செயற்படுதல்" என்ற ஸ்ரீகாந்தாவின் கோஷம் அர்த்தமுள்ளதாக அமையவேண்டுமாயின், அதற்கும் இந்த ஜனநாயகப் பாதையை உறுதி செய்யும் விவகாரம் அத்தியாவசியமாகின்றது.

ஆனால் இது விடயத்தில், வவுனியா மாவட்டத்தில் ரெலோவின் கடந்த காலப் பதிவுகள் நியாயமானவையாக - நேர்மையுள்ளவையாக - இல்லையென்ற அப்பட்டமான உண்மையை நாம் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

ஜனநாயக வழிக்குத் திரும்பியதாகக் கூறிவிட்டு சட்டவிரோதமான முறையில் வரி, கப்பம் வசூலித்துக்கொண்டு-

விடுதலைப் போராட்டத்துக்கு ஜனநாயக ரீதியில் எழுச்சி தருவதற்கு 'ஒற்றுமை முன்னணி' அமைக்க முற்படுவதோ -

அந்த 'ஒற்றுமை முன்னணி'யில் செயற்பட வருமாறு ஜனநாயகக் கட்சிகளை அழைப்பதோ -

பொருத்தமற்ற - சரிப்பட்டுவராத - விடயங்களாகும்.

ஒருபுறத்தில் ஜனநாயக சக்திகளை இணைக்கும் முயற்சியில் ஈடுபடும் ஸ்ரீகாந்தா போன்றோர், மறுபுறத்தில் அந்த சக்திகள் அனைத்தும் ஜனநாயக வழியில் இருப்பதை உறுதிப்படுத்துவதிலும் முழுமூச்சாக ஈடுபடவேண்டும். அப்போதுதான் 'ஒற்றுமை முன்னணி' அர்த்தமுள்ளதாகும்.

### ஊராரின் எதிர்ப்பைப் புறக்கணித்து

# கசிப்புக் காய்ச்சியவர்களுக்கு இளைஞர் குழு புகட்டிய 'பாடம்'

யாழ்ப்பாணம்,ஒக்.3

பண்டத்தரிப்பில், ஊராரின் எதிர்ப்பைப் புறக்கணித்துவிட்டு, நீண்ட காலமாகக் கசிப்பு உற்பத்தி செய்தவர்களுக்கு இளைஞர்கள் குழு 'பாடம்' புகட்டியது.

சம்பவப் பகுதியில் நீண்டகாலமாகவே கசிப்புத் தயாரிக்கப்பட்டு விற்கப்பட்டு வந்ததாகவும் -

இந்தச் சமூகவிரோதச் செயலை நிறுத்தும்படி, சம்பந்தப்பட்டவர்களுக்கு அப்பகுதியில் உள்ள தேவாலயப் பங்குத் தந்தை உட்படப் பல சமூக நலன்விரும்பிகள் அறிவுரை கூறியதாகவும் -

ஆனால் அறிவுரைகளைப் புறக்கணித்துவிட்டு, அவர்கள் கசிப்பு உற்பத்தியைத் தொடர்ந்ததாகவும் - கூறப்படுகிறது.

கசிப்பு உற்பத்தி காரணமாக, அப்பகுதியில் வேறு பல சமூகவிரோதச் செயல்களும் அதிகரித்து வந்தன.

இந்த நிலையில், கடந்த சனிக்கிழமை இரவு இளைஞர் குழு ஒன்று கசிப்பு உற்பத்தி செய்த இடத்தை முற்றுகையிட்டு, அங்கிருந்த கசிப்பை நிலத்தில் ஊற்றியதுடன், கசிப்புத் தயாரிப்பு உபகரணங்களையும் அடித்து நொறுக்கி அழித்ததாகக் கூறப்படுகிறது. (ஒ-15)

## நாட்டு நடப்பு

*பொது மகளிர் ஆடைகளைக் களைந்து விட்டு*
*பூவை நான் கற்பரசி என்றாற் போல்*
*மது வருந்தி மயங்கி நின்று மார்பு தட்டி*
*மதுவொழிக்க மேடைதனில் முழங்குமாப் போல்*
*பொது இடத்தில் குப்பை கூழம் கொட்டிவிட்டு*
*பொல்லாத நுளம்பொழிக்கப் புறப்பட்டார் போல்*
*சாது வந்தப் பசுவதனைச் சாகடித்து விட்டு*
*சமய நெறி பரப்புமந்த சான்றோர் போல்*
*ஓது தற்கரிய தமிழ்ப் பண்பை கொன்றோரெல்லாம்*
*ஓலமிட்டுக் கத்துகிறார் தமிழ் வாழ்கவென்று!*

*- விகடகவி.*

### சுன்னாகம் மேற்குப் பகுதியில் சம்பவம்

# திருடர் தொல்லையைத் தடுக்க முயற்சித்த கிராம சேவையாளர் மீது கடும் தாக்குதல்!

வலி.தெற்கு,ஒக்.3

திருடர் தொல்லையைத் தடுக்க விழிப்புக்குழு அமைத்த கிராம சேவையாளர் ஒருவர், அவரது வீட்டில் வைத்து கும்பல் ஒன்றினால் தாக்கப்பட்டார்.

சுன்னாகம் மேற்கில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற இச் சம்பவத்தில் மு.பாஸ்கரகுமார் என்ற கிராம சேவையாளரே கையில் பலத்தகாயத்துக்குள்ளாகியுள்ளார்.

இவரது ஏற்பாட்டில் அமைக்கப்பட்ட விழிப்புக் குழுவினர், சம்பவ தினத்தன்று இரவு சுன்னாகம் - கந்ரோடை வீதியில், சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய மூவரை மறித்து விசாரித்ததாகவும்-

அவர்களின் பதில்கள் சந்தேகத்தை அதிகப்படுத்தவே, கிராம சேவையாளரின் வீட்டில் அவர்களை விழிப்புக் குழுவினர் தடுத்து வைத்திருந்ததாகவும் - கூறப்படுகிறது.

அந்தச் சமயத்தில், தடுத்து வைக்கப்பட்டவர்களின் சகாக்கள் என்று கருதப்படும் சிலர் தடிகள், இரும்புக் கம்பிகள் சகிதம் கிராம சேவையாளர் வீட்டிற்குச் சென்று, விழிப்புக் குழுவினரையும், கிராமசேவையாளரையும் கடுமையாகத் தாக்கிவிட்டு, அங்கு தடுத்துவைக்கப்பட்டிருந்தவர்களை மீட்டுச் சென்றனர்.

அப்போது அவ்வழியாக வந்த உதவிக் கல்விப்பணிப்பாளர் ஒருவரும், அக்கோஷ்டியால் மிரட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக பொலீஸில் செய்த முறைப்பாட்டையடுத்து, கந்தரோடையில் உள்ள அகதிமுகாம் ஒன்றைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் -

இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டு, தலைமறைவாகியுள்ள மற்றைய சந்தேகநபர்களை சுன்னாகம் பொலீஸார் தேடி வருவதாகவும் - கூறப்படுகிறது.

தாக்குதலுக்குள்ளான கிராம சேவையாளர் கையில் ஏற்பட்ட காயத்துக்கு சிகிச்சை பெற யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். (ஒ-152)

## வலிகாமத்தில் காலபோகம் ஆரம்பம்

கடந்த வாரம் பெய்த மழையையடுத்து வலிகாமம் பகுதியில் விவசாயிகள் காலபோக நெல் விதைப்பு வேலைகளை ஆரம்பித்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

உடுவில், கந்தரோடை, மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை பகுதிகளில் விவசாய நிலங்களை உழும் பணிகள் இடம்பெற்று நெல்விதைக்க ஆயத்தம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (ஒ-152)

# பொது நூலகத்தைப் பயன்படுத்துவதில் மாணவர் எதிர்நோக்கும் அசௌகரியம்

### மாநகரசபை உறுப்பினர் எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.3

யாழ். செயலகத்திற்குச் சமீபமாக அமைந்துள்ள யாழ்.மாநகரசபை பொது நூலகத்தைப் பல்கலைக்கழக மற்றும் பாடசாலை மாணவர்கள் பயன்படுத்துவதில் பல்வேறு அசௌகரிய நிலைமை நிலவுகிறது. இது குறித்து மாணவர்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாநகரசபையின் ஈ.பி.டி.பி. உறுப்பினர் திங்ஸிலி கணேசன்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற யாழ்.மாநகரசபையின் மாதாந்தக் கூட்டத்தின் இரண்டாம் நாள் அமர்வில் இடம்பெற்ற விவாதம் ஒன்றின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ்.மாநகரசபை மேஜர் என்.ரவிராஜ் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் அவர் மேலும் கூறியதாவது:-

யாழ் பொது நூலகத்தில் மின்சாரம் இல்லாத சமயங்களில் அச் சூழல் கடும் இருளாகக் காணப்படுகின்றது. புத்தக நிலைப் பெட்டிகள் ஜன்னல்களை மறைத்து அடுக்கப்பட்டிருப்பதே இதற்குக் காரணம் என தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் அங்கு பணிபுரியும் அலுவலக ஊழியர்கள் சிலர் உரத்த சத்தத்துடன் உரையாடுவதும், ஏனைய மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு ஊறு விளைவிப்பதாக அமைகின்றது - என்றார்.

இது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முதல்வர் நூலகப் பிரிவு 1 அதிகாரி எஸ்.தனபாலசிங்கத்தைப் பணித்துள்ளார். (க-9)

# 500 மெ.தொன் யூரியா யாழ். வந்து சேர்ந்தது

### விவசாயிகளுக்கு விரைவில் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஒக்.3

யாழ். மாவட்ட விவசாயிகளின் பாவனைக்கென கமநல சேவைகள் திணைக்களம் 500 மெற்றிக் தொன் யூரியாவை இங்கு எடுத்து வந்துள்ளது.

யூரியாவை யாழ்ப்பாணம் எடுத்து வருவதில் இருந்து வந்த நெருக்கடிகள் குறித்து கமநல சேவைகள் திணைக்களம், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்கு கொண்டு வந்திருந்தது என்றும் -

இந்த விவகாரம் குறித்து அமைச்சர் எடுத்த உடனடி நடவடிக்கையை அடுத்து யூரியா யாழ். எடுத்து வரப்பட்டுள்ளது என்றும் ஈ.பி.டி.பி. வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கமநல சேவைகள் திணைக்களத்தின் கிளை நிலையங்கள் மூலம் இவை விரைவில் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும் என்றும் - அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

# விஷமிகள் சிலர் அட்டகாசம்; பாடசாலைச் சொத்துகள் சேதம்

### இசை நிகழ்ச்சியின்போது சம்பவம்

வலிகாமம் தெற்கு,ஒக்.3

கடந்த சனிக்கிழமை இரவு மருதனார்மடம் 'இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற இன்னிசை கானங்கள் நிகழ்ச்சியின்போது இராமநாதன் கல்லூரி, புனியன் கல்லூரிகளுக்கு உரிமையான சொத்துக்கள் பல விஷமிகள் சிலரால் வேண்டுமென்றே நாசமாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மருதனார்மடம், உடுவில், இணுவில் ஆகிய வர்த்தக சங்கங்களால் ஒழுங்கு செய்யப்பட்ட இன்னிசை கானங்கள் நிகழ்ச்சியின்போதே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விஷமிகள் சிலர் கல்லூரி வளவில் மாணவர்களின் பாவனைக்கு இருந்த எட்டுக் குழாய்த்தண்ணீர்க் குழாய்களை முறித்தும், தளபாடங்கள் பலவற்றை உடைத்தும், வளாகத்தில் நின்ற பூமரங்கள் பலவற்றை நாசமாக்கியும் அட்டகாசம் புரிந்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்துச் சம்பந்தப்பட்டவர்களுக்கும், இராணுவத்தினருக்கும் பாடசாலை நிர்வாகத்தினர் தெரியப்படுத்தியுள்ளதுடன், எதிர்காலத்தில் இதுபோன்ற பொது நிகழ்ச்சிகளை பாடசாலைகளில் நடத்தாமல் ஏனைய பொது இடங்கள், திறந்த வெளிக் கலையரங்குகளில் நடத்துவது நல்லது எனவும் தெரியப்படுத்தியுள்ளனர். (ம-152)

### நாளை

புரட்டாதி 18
வியாழக்கிழமை
திதி: துதியை
முன்னிரவு 9.34 வரை.
நட்சத்திரம் : அச்சுவினி
பின்னிரவு 1.55 வரை
சுபநேரம்: 7.12 - 9.02
ராகுகாலம் : 1.32 - 3.02
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

ஓர் இளைஞனை முன்னேற விடாது தடுப்பது எதுவென்றால், அதிகமாகப் பேசுவதுதான்.

# கொழும்பில் மின்வெட்டு இனி 2மணி நேரமே!

கொழும்பு,ஒக்.3

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுவந்த எட்டுமணி நேர மின்வெட்டு இன்று தொடக்கம் இருமணி நேரமாகத் தளர்த்தப்பட்டுள்ளதாக மின்சாரசபை அறிவித்துள்ளது.

முக்கிய நீரேந்து பகுதிகளில் போதியளவு நீர் நிறைந்துள்ளதால் மின் வெட்டுத் தளர்த்தப்படுவதாகவும் -

மாலை நேரத்தில் மட்டும் இரண்டு மணிநேரம் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்றும் -

மின்சாரசபை மேலும் தெரிவித்துள்ளது.

ஏனைய பகுதிகளில் படிப்படியாக மின்வெட்டுத் தளர்த்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3-4)

கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



பற்றைக்குள் விழுந்த பட்டத்தை
எடுக்க விரையும் சிறுவனே கேள்!
கண் மறைவாய் புதைந்திருக்கும்
கொடிய மிதிவெடிகள் அங்குண்டு.
சிதறிவிடும் உன் சின்னக் கால்கள்
திரும்பிவிடு! வேண்டாம் ஆபத்து!

# ஜி.சீ.ஈ. சாதாரணதர பரீட்சைப் பெறுபேற்றில் பாடசாலைக் கணிப்பீடுகளும் உள்ளடக்கம்

## 2002 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு

அச்சுவேலி,ஒக்.3

2002ஆம் ஆண்டில் இருந்து ஜி.சீ.ஈ. சாதாரணப் பரீட்சைப் பெறுபேற்றில் பாடசாலை மட்டத்திலான கணிப்பீட்டுப் புள்ளிகளும் உள்ளடக்கப்படவுள்ளன.

இது தொடர்பான வழிகாட்டல் சுற்றறிக்கையினை இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

இதன் அடிப்படையில் -

பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீடுகளில் 10ஆம் 11ஆம் தரங்களுக்குரியதை பூர்த்தி செய்த மாணவர்களே 2002ஆம் ஆண்டில் சாதாரண தரப் பரீட்சைக்கு விண்ணபபிக்க முடியும்.

2002ஆம் அண்டு பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் பெறுபேறுகளுக்காக 10ஆம் தரத்தில் 2ஆம் 3ஆம் தவணைக்குரியதும் 11ஆம் தரத்தில் முதலாம் இரண்டாம் தவணைக்குரியதுமான நான்கு தவணைகளுக்குரிய கணிப்பீடுகளின் புள்ளிகள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளன.

2003ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் பெறுபேறுகளுக்காக 10ஆம் 11ஆம் தரங்களின் ஐந்து தவணைக்குரிய கணிப்பீடுகளின் புள்ளிகள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-11)




சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் எற்பாட்டில் சுன்னாகம் கிழக்கு சனசமூக நிலையத்தில் நடத்திய இலவச கண் மருத்துவ பரிசோதனை முகாமில் மருந்து வழங்கப்படும் போது எடுக்கப்பட்ட படம். லயன்ஸ் கழகம் மற்றும் சனசமூக நிலைய உறுப்பினர்களைப் படத்தில் காணலாம்.

# பௌத்த மதத்தை பாதுகாக்க ஆணைக்குழு நியமிக்கப்படும்

கொழும்பு,ஒக்.3

பௌத்த சமயத்தைப் பாதுகாப்பதற்கும், பௌத்தர்கள் ஏனைய மதங்களுக்கு மாறுவதைத் தடுப்பதற்கும் ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படஇருப்பதாக பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா தெரிவித்துள்ளார்.

பௌத்த சமயத்தின் அபிவிருத்திக்காக இந்த ஆணைக்குழுக்கள் ஊடாக பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்படவிருப்பதாகவும் -

பௌத்த பிக்குகளுடன் சில முன்னணி அரசியல்வாதிகளும் இந்த ஆணைக்குழுவில் இடம்பெறுவர் என்றும் -

அவா மேலும்தெரிவித்தார்.(ம-4)

# ஆயுதத்துடன் வந்த திருடரை ஊரார் கூடி விரட்டியடித்தனர்!

## நெல்லியடிப் பகுதியில் சம்பவம்

ஆயுதங்களுடன் வீடொன்றில் திருட வந்த கும்பலை ஊரார் கூடி விரட்டியடித்த சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு நெல்லியடியில் இடம்பெற்றுள்ளது.

மீசாலையில் இருந்து இடம் பெயர்ந்து நெல்லியடி பழைய ஆஸ்பத்திரி வீதிப் பகுதியில் வசிக்கும் செ.வள்ளியம்மை என்பவரது வீட்டில் நள்ளிரவுவேளையில் வாள், பாளைக் கத்தி, சிறு கோடரி ஆகியவற்றுடன் கதவைத் தட்டி, "ஊர் காவற்படையினர் வந்துள்ளோம் கதவைத் திறவுங்கள்" என்று அழைத்தனர்.

வீட்டில் இருந்தவர்கள் கதவை மெதுவாகத் திறந்து பார்த்து திருடர்களின் கைகளிலிருந்த ஆயுதங்களைக் கண்டவுடன் கதவை உடனே மூடிவிட்டு அவலக்குரல் எழுப்பினார்கள்.

அவர்களது குரல்கேட்டு அங்கு அயலவர்கள் திரண்டு வருவதைக் கண்டதும் திருடர் கோஷ்டி தலை தெறிக்க ஓட்டம் பிடித்தது.

கடந்த இரு மாதங்களில் சம்பவம் இடம்பெற்ற வீட்டில் திருட்டு முயற்சி இடம்பெற்றது இது மூன்றாவது தடவை என்றும் -

ஆயினும் அப்பகுதியில் ஒரு வீட்டில் ஏதாவது அசம்பாவிதம் நிகழ்ந்தால், அங்கே ஊரே திரண்டுவிடும் வழக்கமிருப்பதால், திருடர்கள் விரட்டப்பட்டிருப்பதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-15)

## அஞ்சலி

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான மாதவராவ் சிந்தியாவின் அகாலமறைவு எமக்கு அதிர்ச்சியையும் ஆழ்ந்த துயரத்தையும் ஏற்படுத்தியுள்ளது. அவர் இலங்கைத் தமிழர் பிரச்சினையிலும் அக்கறை கொண்ட ஓர் அரசியல் வாதியாவார்.

- இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எவ்.இன் யாழ்.மாநகர சபை உறுப்பினர் சுபத்திரன் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## மேலதிக அதிபர் நியமனம்

யாழ்ப்பாணம்,ஒக்.3

யாழ்ப்பாணம் மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையின் அதிகாரி ஒருவர், கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயத்துக்கு மேலதிக அதிபராக வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

உடனடியாக இப்பதவியைப் பொறுப்பேற்றுக்கொள்ளுமாறு பணிப்பாளரால் அவருக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு வெளியே எங்கும் மேலதிக மாகாணக் கல்விப் பணிமனை என்றொரு அலுவலகம் இல்லாதது போலவே மேலதிக அதிபர் என்றொரு பதவியும் இலங்கையின் கல்விக் கட்டமைப்பில் இல்லாத புதிய பதவி என்று யாழ்ப்பாணத்தின் கல்விச் சமூகம் பேசிக்கொள்கிறது.

எனவே குறிப்பிட்ட அதிகாரியானவர் இலங்கையின் முதலாவது மேலதிக அதிபர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். (ம-10-ரி)

## மாணவர் விவரம் திரட்டு

தென்மராட்சி,ஒக்.3

1999, 2000, 2001 ஆகிய காலப் பகுதியில் முன்பள்ளி, தரம் 1 ஆகியவற்றில் கல்விகற்ற சிறார்களின் விவரங்கள் தென்மராட்சி கல்விவலய அலுவலகத்தினால் திரட்டப்படுகின்றன.

மேற்படி வருடங்களில் முன்பள்ளிகள் மற்றும் பாடசாலைகளில் தரம் 1 ஆகியவற்றில் கல்வி பயின்ற, பயிலும் மாணவர்களின் விவரங்களை எதிர்வரும் ஐந்தாம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் இயங்கிய முன்பள்ளிகள் இவ்வருடங்களுக்குரிய மாணவர் விவரப் பட்டியலை அனுப்பிவைக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (ம-117)

## கல்விக் கண்காட்சி

அச்சுவேலி,ஒக்.3

அச்சுவேலி மத்திய கல்லூரியின பாடமேம்பாட்டுக் கல்விக் கண்காட்சியும், தண்ணீர்த் தாங்கி திறப்பு விழாவும் நாளை வியாழக்கிழமை நடைபெறும்.

கல்லூரி அதிபர் திருமதி ச.கனகராசா தலைமையில் நடைபெறும் விழாவில் விருந்தினர்களாகக் கோப்பாய்க் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரமும், வலி.கிழக்கு பிரதேச சபையின் உபதலைவர் யூ.எல்.ஏ. ரவியும் கலந்துகொள்கின்றனர். (ம-11)


வடக்கு - கிழக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார, இந்து சமய கலாசார அமைச்சு ஆதரவுடன்

**முயற்சி திறன்விருத்தி மையம் ஆரம்பிக்கும்**

**தொழிற்றிறன் விருத்திப் பயிற்சிகள்**

எமது நிறுவனத்தால் ஏற்கனவே விளம்பரப்படுத்தப்பட்டதன் பிரகாரம் பயிற்சி நெறிகளுக்கு புதிய மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கை இம்மாதம் 12ஆம் திகதி மேற்கொள்ளப்படும். அன்றைய தினம் அனுமதிக் கடிதங்கள் கிடைக்கப்பெற்றவர்கள் சமுகம்தந்து பதிவினை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

| பயிற்சி நெறிகள் | இடங்கள் |
|---|---|
| 1. வயறிங் | உரும்பிராய் |
| 2. ரி.வீ.,றேடியோ திருத்தல் | உரும்பிராய் |
| 3. தையல் இயந்திரம் திருத்தல் | உரும்பிராய், யாழ்ப்பாணம். |
| 4. புத்தகம் கட்டுதல் | உரும்பிராய், யாழ்ப்பாணம். |
| 5. தமிழ் தட்டச்சு | உரும்பிராய், யாழ்ப்பாணம். |
| 6. ஆங்கில தட்டச்சு | உரும்பிராய், யாழ்ப்பாணம். |
| 7. தமிழ் தட்டச்சு, சுருக்கெழுத்து | உரும்பிராய், யாழ்ப்பாணம். |
| 8. ஆடைகள் தைத்தல் | உரும்பிராய், யாழ்ப்பாணம். |

தலைவர்,
*அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,*
*108, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.* (C/18479)


# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 18 - 08 - 1946



உதிர்வு 03 - 10 - 1998

## திருமதி மயில்வாகனம் றெஜீனா

"இமைப் பொழுதெல்லாம் நீக்கமற அங்கும்
நிலைபெற்று ஒளி வீசும் தாயே!
முக்கனியாய்ப் பெற்ற முதற் கனி
இல்லற வாழ்வில் இணைந்த நற்பேற்றை
மூன்றாம் ஆண்டின் நினைவில் துதிப்போம்."

கணவர், பிள்ளைகள், பெற்றோர்,
மருமக்கள், மைத்துனிகள்,
உறவினர், நண்பர்கள்.

*211, 2ஆம் குறுக்குத் தெரு,*
*யாழ்ப்பாணம்.* (92856)

# பிரிந்தவரின் பிறந்தநாள் நினைவு

மண்ணில் 1933 - 10 - 03



விண்ணில் 1996 - 04 - 19

## Dr.A.Rajanajagam

(Retired Divisional R.M.P.,
Anuradapura and Polanaruwa district)

நாடு மகிழச் சேவை செய்த - நீங்கள்
பிறந்த இப்பொன்னாளை அன்புடன் நாம் இன்று
நினைவு கூருகின்றோம்.

- பாசமிக்க குடும்பத்தினர்.

*பாணாவெட்டி,*
*தொல்புரம் மேற்கு, சுழிபுரம்.* (92687)

# நான்காவது ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 05 - 08 - 1939



உதிர்வு 16 - 10 - 1997

அமரர்

## ஞானப்பிரகாசம் ஆனந்தஈஸ்வரன் J.P.

*அன்னாரது ஆத்மா சாந்தி அடைய*
*ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்!*
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரது பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

*"இரத்தின மஹால்",*
*சங்கானை.* (92870)

# நெஞ்சம் மறவாத 26ஆவது ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 05 - 08 - 1917



விண்ணில் 03 - 10 - 1975

## திருமதி மேரி கிருபையம்மா இராஜக்கோன்

அன்னை யென்பதோர் அகல் விளக்கு!
ஆயிரங் காலத்து ஒளிவிளக்கு!!
பொன்னும் பொருளும் குவித்தாலும் - அது
போதுமா அன்னையின் புன்சிரிப்புக்கு?
நெஞ்சில் இருக்கும் சுடர் விளக்கு!
என்றும் நாம் ஏற்றும் பாசவிளக்கு!!

- அன்புப் பிள்ளைகள்.
*32, றக்கா லேன்,*
*சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.*

*ஏழாலை வடக்கு,*
*ஏழாலை.* (92855)

# யாழ். இந்து மகளிர் கல்லூரியில் உலக ஆசியர் தின நிகழ்வுகள்

## வெள்ளிக்கிழமை இடம்பெறும்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ் மாவட்டக் கிளைகள் இணைந்து நடத்தும் உலக ஆசிரியர் தின நிகழ்வுகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

சங்கத்தின் வேலணைக் கிளைத் தலைவர்பொ. அருணகிரிநாதன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் வி. இராசையா, திவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் ஆகியோர் பங்குபற்றுவர். (க-3)

## பருத்தித்துறையிலும் விழா

வடமராட்சி, தென்மராட்சி வலயப் பாடசாலைகள் ஒன்றிணைந்து நடத்தும் உலக ஆசிரியர் தின விழா எதிர்வரும் 5 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு பருத்தித்துறை இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் இவ் விழா நடைபெறவுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டத் தலைவர் வ. கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினர்களாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா, தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைத் தலைவர் திருமதி சரஸ்வதி ஜெயராசா, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

இவ் விழாவில் கலந்து கொண்டு சிறப்புரைகளை யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீடாதிபதி மா. நடராசசுந்தரம், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் ச. விநாயகமூர்த்தி, யாழ். தேசியக் கல்வியியற் கல்லூரி உப பீடபதிபதி ஜெ. சந்திரப்பிரகாசம் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

இவ் விழாவில் ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், அதிபர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (ம-182)

## மானிப்பாய் இந்துக்கல்லூரியில்

சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட அதிபர்கள் சங்கம் நடத்தும் உலக ஆசிரியர் தின விழா எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

இவ் விழாவில் பிரதம விருந்தினராக யாழ்; பல்கலைக்கழக நுண்கலைத் துறைத்தலைவர் பேராசிரியர் சபா. ஜெயராஜா கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய்க் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் க. தனபாலசிங்கம் கலந்துகொள்வார்.

ஆசிரியர்களுக்கிடையில் மென்பந்து, வலைப்பந்துப் போட்டிகள், எழுந்தமான கவிதைபாடும் போட்டி என்பனவும் நடைபெறும்.

25 வருட சேவையைப் பூர்த்தி செய்த ஆசிரியர்கள் இவ் விழாவில் பாராட்டிக் கௌரவிக்கப்படுவார்கள்.

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி. வடக்கு, ஒக். 3

வலிகாமம் வலய உடுவில் கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ள 14 வயதிற்கு உட்பட்டோருக்கான ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம் எதிர் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

★ ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம் எதிர் சுன்னாகம் மயிலணி சைவ ம.வி.

★ ஏழாலை ம. வி. எதிர் தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை.

★ இணுவில் மத்திய கல்லூரி எதிர் குப்பிளான் விக்னேஸ்வரா ம. வி.

(க-86)

★ ★ ★

யாழ்ப்பாணம் வலய நல்லூர் கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் 16 வயதுக்குட்பட்டோருக்கான இறுதி ஆட்டமும் 18 வயதுக்குட்பட்டோருக்கான மூன்றாம் இடம் மற்றும் இறுதி ஆட்டம் என்பனவும் இடம்பெறவுள்ளது.

(க-86)

★ ★ ★

யாழ்ப்பாணம் வலய கோப்பாய் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள 16 வயதுப் பிரிவுக்கான ஆட்டங்களில் கலந்து கொள்ளும் அணிகள் வருமாறு:-

★ நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி எதிர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

★ அச்சுவேலி மத்திய கல்லூரி எதிர் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி.

★ புத்தூர் புத்தகலட்டி விஷ்ணு வித்தியாலயம் எதிர் வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம். (க-86)

★ ★ ★

யாழ்ப்பாணம் வலய யாழ்ப்பாணம் கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளும் அணிகள் வருமாறு:

### 16 வயதுப் பிரிவு

★ புனித ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை எதிர் நாவாந்துறை றோ. க. வித்தியாலயம்.

★ புனித ஜோசப் வித்தியாலயம் எதிர் வைத்தீஸ்வராக் கல்லூரி.

### 18 வயதுப் பிரிவு

★ புனித ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை எதிர் நாவாந்துறை றோ. க. வித்தியாலயம். (க-86)

# எந்த அரசு பதவிக்கு வந்தாலும் நாம் முண்டு கொடுக்கமாட்டோம்

## பொ. ஐ. மு. ஆட்சியை வீழ்த்த வேண்டும் என்கிறார் சங்கரி

யாழ்ப்பாணம், ஒக். 3

எதிர்க்கட்சியில் இருந்து எவருக்கும் ஆதரவு கொடுப்போமே தவிர எந்த அரசுக்கும் முண்டு கொடுக்கமாட்டோம். இன்றைய அரசை வீழ்த்தவேண்டும் என்பதே எமது குறிக்கோள்.

இப்படிக் கூறினார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப - தலைவர் வீ. ஆனந்தசங்கரி.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். அலுவலகத்தில் 'இன்றைய அரசியல் சூழ்நிலை' என்ற தலைப்பில் இடம்பெற்ற கலந்துரையாடலில் பேசும்போதே இப்படி அவர் கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் :-

எமது அண்மைக்கால அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பாகப் பல்வேறு குழப்பமான செய்திகளைப் பத்திரிகைகள் பிரசுரித்ததன் காரணமாக அதற்குரிய விளக்கத்தைத் தெரிவிப்பதற்காக இக்கலந்துரையாடலை ஒழுங்குசெய்துள்ளோம்.

தமிழ் மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியை முழுக்க முழுக்க நம்பி இருக்கின்றனர். தமிழ் மக்கள் மட்டுமல்ல வெளிநாட்டுப் பிரதிநிதிகள், சமயத் தலைவர்கள் மற்றும் வெளிநாட்டில் வாழ்கின்ற எமது மக்கள் எல்லோரும் இனப்பிரச்சினை பற்றி எமது கட்சியுடன்தான் முதலில் பேசுவார்கள்.

பணம், பதவிகள், சலுகைகள் மூலமோ அல்லது மிரட்டலின் மூலமோ எம்மை யாரும் விலைக்கு வாங்கிவிட முடியாது. ஆனால் தமிழ் மக்களாகிய நீங்கள் எல்லோரும் எங்கள் தலைமையை ஏற்றுக்கொள்ள வேண்டும். எமது கட்சியைப் பொறுத்தவரையில் இந்த அரசாங்கம் இனி ஆட்சியில் இருக்கக் கூடாது. அவ்வாறு அது ஆட்சியில் இருந்தால் எம்மை விலைக்கு வாங்கவே முற்படும்.

### அரசை வீழ்த்தவேண்டும்

கூட்டணி உறுப்பினர்கள் ஆகிய நாங்கள் உத்தமர்கள் ஆகவே வாழ்ந்துவருகின்றோம். சாகும்போதும் உத்தமர்களாகவே சாவோம். எதிர்க்கட்சியில் இருந்து ஆதரவு கொடுப்போமே தவிர எந்த அரசிற்கும் முண்டு கொடுக்கமாட்டோம். இந்த அரசாங்கத்தை வீழ்த்தவேண்டும் என்பதே எமது குறிக்கோள் என்று தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக வருகை விரிவுரையாளர் எஸ். இராஜரட்ணம் தமது உரையில் --

விரைவில் ஒரு பொதுத் தேர்தல் இங்கு வந்நால் ஆயுதம் தாங்கிய அத்தனை கட்சிகளையும் பின்தள்ள வேண்டியது தமிழர் விடுதலைக் கூட்டணியின் கடமையாகும். இதுவே ஜனநாயகத்துக்குரிய கட்சியும் ஆகும். தேர்தலில் போட்டியிடுவதன் மூலம் தமிழர் விடுதலைக் கூட்டணி முழு இடங்களையும் கைப்பற்ற வேண்டும் என்று குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ், சிவமகாராசா தனது உரையில் தெரிவித்ததாவது:-

எமது கட்சி நாடாளுமன்றில் வரவு செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களித்ததன் காரணமாக எமக்குரிய நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்படவில்லை. நாம் எதற்காக வரவு செலவுத் திட்டத்துக்கு எதிராகக் கை உயர்த்தினோம்? பாதுகாப்பு நிதிக்குக் கடந்த ஆண்டை விட அதிக பணம் ஒதுக்கியதாலேயே அவ்வாறு செய்தோம். இந்த ஒரு காரணத்தை வைத்து எமக்கு நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்படவில்லை.

ஈ.பி.டி.பியைப் பொறுத்தவரையில் வட இலங்கையில் ஓர் அரசியலும் தென் இலங்கையில் ஓர் அரசியலும் நடத்தி வருகிறது. மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்பதுதான் அவர்களின் தாரக மந்திரம். அமைச்சர் பதவி, பணம், ஊழல் இவைதான் அவர்களுக்குத் தேவை—என்றார்.

யாழ். மாநகர சபையின் முதல்வர் நடராசா ரவிராஜ் உரையாற்றும் போது:-

ஜனநாயக விழுமியங்களை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணி. பேரினவாத அரசுகள் மீது நாங்கள் நம்பிக்கை வைக்க முடியாது. இனவாதக் கட்சியுடன் கூட்டுச்சேர்ந்து நாம் எதற்கும் துணைபோக மாட்டோம்.

மாநகர சபைக்குரிய நிதியை ஒதுக்காத அமைச்சருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கத் தயாராகவுள்ளோம். நான் பிறந்த காரணத்துக்காக எனது தொகுதிக்கும் நான் கல்வி கற்ற காரணத்துக்காக எனது பாடசாலைக்கும் நிதி எதுவும் வழங்காத அமைச்சரைப் பற்றி என்ன சொல்ல முடியும் என்று குறிப்பிட்டார்.

இந்தக் கருத்தரங்கில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர்கள் மற்றும் அபிமானிகள் பலர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். (க-10-ரி)

## போக்குவரத்துத் தொண்டர் மீது தாக்கு:

# சந்தேகநபர்கள் இருவருக்கும் இரு வார விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஒக். 3

யாழ். நகரில் வீதி ஒழுங்குகளைக் கண்காணித்துக் கொண்டிருந்த போக்குவரத்துத் தொண்டர்களைத் தாக்கியதாகக் கூறி நேற்று முன்தினம் பொலீஸாரால் கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களும் நேற்று பொலீஸாரால் யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் நீதிவான் இ. த. விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இது குறித்து விசாரணை நடத்திய நீதிவான், சந்தேக நபர்களான கலால் திணைக்கள உத்தியோகத்தரையும் புடைவைக்கடை உரிமையாளரையும் இரண்டு வாரங்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இந்த வழக்கில் சந்தேக நபர்கள் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணிகள் போக்குவரத்துத் தொண்டர்கள் சட்டபூர்வமாக நியமிக்கப்படாதவர்கள் என்று வாதாடினர்.

இவர்களின் இந்தக் கூற்றை மறுத்த நீதிவான், யாழ். மாவட்டத்திலுள்ள நீதிவான்களும், உயர் நீதிமன்ற நீதிபதியும் வடமாகாண பிரதி பொலீஸ்மா அதிபருக்கும், யாழ். பொலீஸ் அத்தியட்சகருக்கும் வீதி விபத்துக்களைத் தவிர்க்கும் முகமாக வீதி ஒழுங்குகளை ஒழுங்குபடுத்துமாறு விடுத்த வேண்டுகோளை அடுத்தே இந்தப் போக்குவரத்துத் தொண்டர் பிரிவு உருவாக்கப்பட்டது என்று கூறினார்.

(ச-4)

## இருபாலையில் கொடூரம்

# பெற்ற தாயே குழந்தையை கிணற்றில் தூக்கிப் போட்டார்!

## சடலம் ஆஸ்பத்திரியில் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 3

பெற்ற தாயே தன் பிள்ளையைக் கிணற்றில் தூக்கிப் போட்டதாகத் தெரிவித்து, 3 வயதுப் பெண் குழந்தையின் சடலம் ஒன்று நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப் பட்டது.

இருபாலை புதிய செம்மணி வீதிப் பகுதியில் நேற்று இச்சம்பவம் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் நண்பகல் கணவன் மனைவிக்கு இடையில் இடம்பெற்ற தகராறைத் தொடர்ந்தே இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளதாகக் கூறப்பட்டது.

தகராறை அடுத்து வீட்டைவிட்டுப் புறப்பட்ட அந்தப் பெண் மறுநாள் காலை 6 மணிக்கு கோப்பாய் பொலீஸில் சரணடைந்ததாகவும், தானே தன் பிள்ளையை அதிகாலை 2 மணிக்கு கிணற்றில் போட்டதாக விசாரணைகளின்போது கூறியதாகவும் பொலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தானாகவே சரணடைந்த இந்தப்பெண் தற்பொழுது கோப்பாய் பொலீஸில் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகிறார்.

இதனிடையே பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்குமாறு நீதிபதி பணித்ததை அடுத்து சடலம் உறவினரிடம் கையளிக்கப்பட்டது. (க-15-ரி)

## குடும்பஸ்தர் மரணம்

யாழ்ப்பாணம், ஒக் 3

வீட்டின் 'பிளாற்றில்' ஏறிய போது தவறி விழுந்தாகத் தெரிவித்து ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் சிகிச்சை பயனளிக்காது அங்கு மரணமானார்.

நேற்று நாவாந்துறையில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் செல்லையா ரவீந்திரன் (வயது 33) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

சடலம் மரண விசாரணையின் பொருட்டு ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (க-15-ரி)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பாவனையிலுள்ள போட்டோ கொப்பியர் SHARP 1016, லமினேற்றிங் மெசின் என்பன உடன் விற்பனைக்கு உண்டு. 368, கே.கே.எஸ். வீதி, சிவன் கோயிலடி, 881, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P. No. 021-2810. (92868)

வளர்ப்பு கலர் மீன்கள் விற்பனைக்கு உண்டு. அத்துடன் ஒட்டுச் செவ்வரத்தை இனங்களும் உண்டு. தொடர்பு: 40/17, சீனியர் லேன், யாழ்ப்பாணம். (நண்பகல் 12 மணிக்குப்பின் பார்வையிடலாம்) (92901)

## காணவில்லை

பிறவுணும் வெள்ளையும் சேர்ந்த நிறமுடைய, வளைந்த கொம்புடைய பசுமாடு ஒன்று 29.09.2001 சனிக்கிழமை முதல் யாழ்.புகையிரத நிலைய சந்தியடியில் காணாமற்போய்விட்டது. கண்டவர்கள் அது பற்றிய தகவலை ரட்ணா, 718, ஆஸ்பத்திரி வதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அறியத்தரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (92882)

## வீடும் வளவும் விற்பனைக்கு

உடுப்பிட்டி, யாழ்.வீதியில் (வாசிகசாலையடி) பத்துப் பரப்புக் காணியும் சகல வசதிகளும் கொண்ட வீடும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு, திருமதி தங்கதிரவியம் நாகராஜா, வாசிகசாலையடி, உடுப்பிட்டி. (92909)

## விண்ணப்பம்

அமெரிக்க சீட்டுழுப்பு விஸாவுக்கான விண்ணப்பங்கள் அமெரிக்க தூதரக புதிய விதிமுறைகளின்படி தயாரித்துக் கொடுக்கப்படும். 2"x2" நிழற்படத்துடன் தொடர்புகொள்ளவும். பொ.சண்முகநாதன், டாக்டர் சுப்பிரமணியம் வீதி, கந்தரோடை, சுன்னாகம். (92897)

## தவறிவிட்டது

பத்மநாதன் ஜெனனியின் விசேட அடையாள அட்டை (இல.0906011490) இணுவிலுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் 24-09-2001 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பருத்தியான் பான்சி ஹவுஸ், பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலோ அல்லது இணுவில் இந்துக் கல்லூரியிலோ ஒப்படைக்கவும். (92900)

சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலியைச் சேர்ந்த மயிலன் இரத்தினம் என்பவரது தேசிய அ.அ.(இல.512771823V), விசேட அ.அ.(இல.0903013009) என்பன நல்லூருக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் 01-10-2001 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய முகவரியில் ஒப்படைத்துதவவும். (92902)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

நல்லின Dachound நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. க.தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (92889)

## ஊசி மருந்து விற்பனைக்கு

நாய்களுக்குரிய Parvo, Distember ஊசி மருந்துகள் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: க.தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (92890)

## தேவை

புதிய, பழைய தமிழ், ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள் மற்றும் றோணியோ இயந்திரங்கள் தேவை. தொடர்பு: R.மருதலிங்கம், 66, மணிக்கூட்டு வீதி (ஆஸ்பத்திரி முன்பாக), யாழ்ப்பாணம். (92864)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர், சேவல், குப் குஞ்சுகள் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (92891)

## வீடு வாடகைக்கு தேவை

யாழ்.நகரை அண்டிய பகுதிகளில் வீடு ஒன்று வாடகைக்குத் தேவை. தேவைப்படின் முற்பணம் கொடுக்கப்படும். தொடர்பு: S.சுதாகரன், இல.244, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (92895)

## இறைச்சிக் கோழிகள்

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் (பாதிக்கோழி உட்பட) தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்யப்பட்டது 1kg 220/= மட்டுமே. தொடர்பு: இல.227, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (92894)

## வலைப்பந்தாட்ட மத்தியஸ்தா பரீட்சை

யாழ்ப்பாணம்,ஒக்.3

இலங்கை வலைப்பந்தாட்டச் சம்மேளனத்தின் அனுசரணையுடன், யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடத்தும் வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சை எதிர்வரும் 6ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும்.

பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை எதிர்வரும் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் பெற்றுக்கொள்ளுமாறு மேற்படி சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (ம-ரி)

## வடமராட்சியில் சிறுவர்களுக்கு காய்ச்சல் பரவுகிறது

வடமராட்சிப் பகுதியில் அண்மையில் பெய்த மழையை அடுத்து, இப்பகுதியில் 12 வயதிற்குட்பட்ட சிறுவர், சிறுமிகள் காய்ச்சல், இருமல், சளி, ஆஸ்மா ஆகியவற்றால் பீடிக்கப்பட்டு வருகின்றனர்.

கடந்த மூன்று தினங்களில் 14 சிறுவர் இந்த நோய்களால் பீடிக்கப்பட்டு மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பருத்தித்துறை, அல்வாய், உடுப்பிட்டி, கரவெட்டி, பொலிகண்டி, டிலோலி, மிருசுவில், வதிரி ஆகிய இடங்களைச் சேர்ந்த சிறுவர்களே ஆஸ்பத்திரி சிறுவர் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-177)

## மக்ஷல் ஹவுஸ்

☆ கடந்த 18.09.2001 வரை சேர்த்து அனுப்பப்பட்ட புகைபடச் சுருள்கள் யாவும் பிரதியாக்கம் செய்து வந்துவிட்டன.

☆ எதிர்வரும் 07.10.2001 இல் புகைப்படச் சுருள்களும், வீடியோ கசற்களும் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படும்.

மக்ஷல் ஹவுஸ்
*20,யூபிலி பசார்,*
*யாழ்ப்பாணம்.*

(92908)

## சேவை நலம் பாராட்டி வாழ்த்துகின்றோம்



*அளவெட்டி அஞ்சல் நிலைய அஞ்சலதிபராக,*
*கடந்த ஏழு ஆண்டுகளாகச்*
*சிறந்த சேவையாற்றி,*
*அளவெட்டி மக்களினதும்*
*அஞ்சல் நிலையங்களின் உத்தியோகத்தர்,*
*ஊழியர்களினது மனங்களிலும்*
*நன்மதிப்பைப் பெற்று, கடந்த 25. 09. 2001 முதல*
*யாழ். பிரதம தபாலகத்திற்கு*
*இடம்மாறிச் சென்றுள்ளவரான*

### உயர்திரு.ஆ.தர்மராஜா

அவர்கள் இன்னும் பல பதவியுயர்வுகள் பெற்று நீண்டகாலம் தம் குடும்பத்தவருடன் சீரும் சிறப்புகள் பல பெற்று வாழ வாழ்த்துகின்றோம் - பாராட்டுகின்றோம்.

அஞ்சலதிபர், உதவி அஞ்சலதிபர்,
உப அஞ்சல் அதிபர்கள்,
சிற்றூழியர்கள்.

*அஞ்சலகம்,*
*அளவெட்டி.* (92904)

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை வல்லிபுரம்

10ஆம் வட்டாரம், புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை வல்லிபுரம் நேற்று (02-10-2001) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னம்மாவின் அன்புக் கணவரும், பூங்காவனம் (கொழும்பு), ஆனந்தன் (திருகோணமலை), செல்வானந்தன், இராசம்மா, சிங்கராஜா (ஜேர்மனி), மீனாட்சியம்மா (கொழும்பு), யோகம்மா, சரஸ்வதி (பிரான்ஸ்), திரவியம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கந்தசாமி, காலஞ்சென்ற சரோஜா மற்றும் விக்னேஸ்வரி, பாலசுந்தரம், ருக்குமணி, பிரேம்குமார், பத்மநாதன், சிவம், குணரெட்ணம் ஆகியோரின் அன்பு மாமனாரும், மகிழ்தினி, பிரதீபன் (ஜேர்மனி), கமல்ராஜ், ஜெயந்தினி, குமார், சண்ணன், காந்தரூபன், கோணேஸ்வரன், காந்தி, உதயகுமார், விஜியகுமார், லக்ஷனா, டாலினி, தமிழினி, கரன், உமா, நவக்குமார், ரஜீவ்குமார், திருக்குமார், தவகுமாரி, பத்மகுமார், சர்மிளா, சர்மிளா, சஞ்சிதன், சஞ்சினா, மயூரி, மயூரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03-10-2001) புதன்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புங்குடுதீவு மணற்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வி.செல்வானந்தன் (மகன்)
கே.பத்மநாதன் (மருமகன்)

*10ஆம் வட்டாரம்,*
*புங்குடுதீவு.* (92898)

## பாராட்டு விழா

உ

இணுவில் நாதஸ்வரமேதை
கலாபூஷணம்
கே.ஆர்.சுந்தரமூர்த்தி அவர்களுக்கு

### பாராட்டு விழா

*காலம்* : இன்று (03.10.2001) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணி
*இடம்* : இணுவில் கந்தசுவாமி கோயில்
*தலைவர்* : பேராசிரியர் சபா.ஜெயராசா அவர்கள்
(தலைவர், நடனத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

**நிகழ்ச்சி நிரல்:**

1. மங்கள விளக்கேற்றல்
2. மங்கள இசை - N.R.கோவிந்தசாமி புதல்வர்கள்
3. தேவாரம் - திரு.இ.பால்ராஜ் அவர்கள
4. வரவேற்புரை - திரு.ச.செல்வராசா அவர்கள் (பொருளாளர், பாராட்டு விழாக்குழு)
5. ஆசியுரை - ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் (முதல்வர், நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனம்)
   பிரம்மஸ்ரீ உ.அபராஜிதக் குருக்கள் (இணுவில் கந்தசுவாமி கோயில்)
6. தலைவர் உரை
7. பாராட்டுப் பத்திரம் வழங்கல் - பிரம்மஸ்ரீ ந.வீரமணிஐயர் அவர்கள் M.A.
   தங்கப்பதக்கம் அணிதல் - டாக்டர் க.பாலசுப்பிரமணியம் அவர்கள
8. இணுவில் கந்தசுவாமி கோயில் சார்பில்
   பட்டம் வழங்கல் - திரு.ஏ.சி.சண்முகலிங்கம் அவர்கள் (தர்மகர்த்தா சபை உறுப்பினர்)
   பொன்னாடை போர்த்தல் - திரு.இ.ஆறுமுகம் அவர்கள் (தலைவர், தர்மகர்த்தா சபை)
9. பாராட்டுரைகள் - திரு.து.வைத்திலிங்கம் அவர்கள் (மேலதிக அரச அதிபர், யாழ். மாவட்டம்)
   பிரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மா அவர்கள் (கோப்பாய் சிவம்)
   கலாபூஷணம் என்.கே.பத்மநாதன் அவர்கள்
   செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் அவர்கள் (ஆசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்)
10. விழா நாயகர் பதிலுரை
11. தலைவர் நிறைவுரை
12. நன்றியுரை - திரு.நா.கிருபாகரன் அவர்கள் (செயலாளர், பாராட்டு விழாக்குழு)

ஊர்வலம் இணுவில் பரமானந்தவல்லி அம்மன் ஆலயத்திலிருந்து பிற்பகல் 3.00 மணிக்கு ஆரம்பமாகும்.

அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இணுவில். (92892)

பாராட்டு விழாக்குழு
இணுவில் மக்கள் சார்பில்.

## துயர் பகிர்கின்றோம்

எமது சக சிரேஷ்ட தாதி உத்தியோகத்தர்
திருமதி தேவகி ஜெயராசசிங்கம்
அவர்களின் அன்புத் தந்தையார்

### கந்தப்பர் இனியப்பு

*(முதலாம் பிரிவு - மண்டூர், மட்டக்களப்பு)*

அவர்களின் திடீர் மறைவையிட்டு நாம் ஆழ்ந்த கவலை அடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*மாவட்ட வைத்தியசாலை,*
*ஊர்காவற்றுறை.* (92910)

வைத்தியசாலை உத்தியோகத்தர்,
ஊழியர்கள், நலன்புரிச் சங்கம்,
*ஊர்காவற்றுறை.*

## கோண்டாவில் இந்து மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம் நடத்திய அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

கடந்த 30.09.2001 ஞாயிறன்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டதன் பிரகாரம் முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு: 1552 இரண்டாவது பரிசு: 355

மூன்றாவது பரிசு: 1813

ஆறுதல் பரிசுகள்: 2337, 362, 157, 1452, 2607.

*குறிப்பு:* பரிசுகளை இன்று (03. 10. 2001) புதன்கிழமை பாடசாலை நேரத்தில் பாடசாலையில் பெற்றுக்கொள்ளலாம்.

- பழைய மாணவர் சங்கம்.

(92903)

## பூப்புனித நீராட்டுவிழா அழைப்பு

உ

ஓம் விராட் விஸ்வ் பிரம்மனே நமஹ

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விஷு வருடம் புரட்டாதி மாதம் 21ஆம் நாள் (07-10-2001) ஞாயிற்றுக்கிழமை பகல் 10.50 மணிமுதல் 12.00 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

எமது சிரேஷ்ட புத்திரி திருநிறை செல்வி

### சைந்தவி அவர்களுக்கு

பூப்புப்புனித நீராட்டுவிழா நடத்த, காமாட்சி அம்பாள் துணைகொண்டு பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் இசைக் கலைஞர்கள் அனைவரும் இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று, தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து செல்வியை ஆசீர்வதித்துச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:
மிருதங்க வித்துவான் வே.அம்பலவாணர் குடும்பத்தினர்
திரு.திருமதி அம்பலவாணர் ஜெயராமன்.
(வயலின் வித்துவான்)

2, சேர் பொன். இராமநாதன் வீதி,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

(92906)

# அரியாலை மக்களின் பிரச்சினைகள்: உரிய நடவடிக்கை எடுக்க குழு அமைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.3

பல கிராம அலுவலர் பிரிவுகளையும், இரு பிரதேச செயலக பிரிவுகளையும் உள்ளடக்கிய அரியாலைப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த, மீளக் குடியமராத மக்களின் பிரச்சினைகளை இனங்கண்டு உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்காக 21பேர் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக அரியாலை அபிவிருத்திச் சங்கத்துடன் இணைந்து இக்குழு செயற்படவுள்ளது.

அரியாலை மக்கள் எதிர்நோக்கும பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் கடந்த ஞாயிறன்று யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில், அரியாலை ஐக்கிய கழகத் தலைவர் எஸ்.ரி.கணநாதன் தலைமையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் இணைப்பாளராக த.பஞ்சலிங்கம் செயற்பட்டார். இக்கலந்துரையாடலிலேயே மேற்படி குழு அமைக்கப்பட்டது.

அரியாலையின் சகல பிரிவுகளின கிராம அலுவலர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட நூற்றுக் கணக்கானோர் இக்கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

அங்கு ஆராயப்பட்ட முக்கிய சில விடயங்கள் வருமாறு:-

தற்போதுள்ள பிரச்சினையை இரண்டு பிரிவாக அதாவது மீளக் குடியமர்ந்த - மீளக்குடியமராத மக்களின் பிரச்சினைகளை வேறுபடுத்தி பிரச்சினைகளை இனங்கண்டு தீர்வு காணவேண்டும் என அங்கு எடுத்துரைக்கப்பட்டது. மீளக்குடியமர்ந்த மக்களின் பிரச்சினைகளாக பின்வரும விடயங்களில் கவனம் செலுத்தப்பட்டன.

முக்கியமாக களவுகள் - இதற்கென அந்தந்தப் பகுதி வீதிகளின் குடியிருப்பவர்கள் தங்களுக்குள் 'விழிப்புக்குழுக்கள்' அமைத்து செயற்படவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது. இதற்கு அந்தந்தப் பகுதி கிராமசேவை உத்தியோகத்தர்களின் உதவி பெறப்படவேண்டும். ஓர் உப பொலீஸ் நிலையம் நாயன்மார்கட்டுச் சந்தியில் அமைக்கக் கோரிக்கை விடுக்கவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது. இவற்றுடன் வீதிகள் செப்பனிடாமை குறித்தும் ஆராயப்பட்டது.

கண்டி வீதியில் முன்னர் செயற்பட்ட பிரசவ விடுதியும் மருந்தகமும் மீண்டும் செயற்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். பொதுவான சந்தை கனகரட்ணம் சந்தியில் அல்லது அதற்கு அண்மையில் 'சிற்றம்பலம்' வளவில் ஏற்படுத்தப்படவேண்டும். உப தபாலகம் மீண்டும் அரியாலையில் ஆரம்பிக்கப்படவேண்டும். தற்போது தற்காலிகமாக சுண்டிக்குளி தபாலகத்திற்கு அண்மையிலேயே அது இயங்குகிறது. இது தேவையற்றது. முன்புபோல் குடி தண்ணீர் வசதி, நன்னீர் வசதி வழங்கப்பட வேண்டும். இ.போ.ச.போக்குவரத்து கச்சேரி சேவையை மாம்பழம் சந்தி வரையாவது நீடிக்கவேண்டும்.

மின்சாரம் விரிவுபடுத்தப்படுவதுடன் தெருவிளக்குகள் முக்கியமான இடங்களில் பொருத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

யாழ்.ப.நோ.கூ.சங்க புங்கன்குளம் கிளை இல.17 மீண்டும் செயற்பட வேண்டும். இராணுவ முகாம்கள், சோதனைச்சாவடிகள், வீதித் தடைகள், வீட்டுச் சோதனைகள் இவற்றிற்கும் மேலாக இரவு வேளைகளில் நடைபெறும் வீட்டுச் சோதனைகள் பற்றி அங்கு விசனம் தெரிவிக்கப்பட்டது.

### புங்கன்குளம் படைமுகாம்

மீளக்குடியமர்ந்த - மீளக்குடியமராத மக்களின் பிரச்சினைகளை ஆராயும்போது மீளக்குடியமரலாம் என்ற பகுதியில்கூட, மீளக்குடியமர முடியாத பிரிவு மக்களின் பிரச்சினை புறம்பாக ஆராயப்பட்டது.

புங்கன்குளம் இராணுவ முகாமால் அரியாலை ச.ச.நிலையம் தனது சொந்த இடத்தில் இயங்கமுடியாமை குறித்தும் அதைச் சுற்றியுள்ள பல வீடுகளில் மக்கள் மீளக்குடியேற முடியாமைபற்றியும் ஆராயப்பட்டது. கடந்த 6 வருடங்களாக இருக்கின்ற புங்கன்குளம் இராணுவ முகாம் அகற்றப்பட்டாலே இப்பகுதியில் மக்கள் மீளக்குடியமரலாம். இப்பிரிவுக்குள் கடந்த ஒன்றரை வருடங்களாக மீளக்குடியமரமுடியாத நிலை உள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

அரியாலை கிழக்கிலிருந்து முள்ளிவரையும், முள்ளியிலிருந்து கண்டி வீதி இரு பக்கங்களிலும் மாம்பழம் சந்திவரை தற்போதைய நிலையில் மீளக்குடியமர முடியாத மக்கள் பிரச்சினைகள் பற்றி ஆராயப்பட்டது. இராணுவ நிலைகள் அகற்றப்படவேண்டும். கண்ணிவெடிகள் அகற்றப்படவேண்டும். மீளக் குடியமரலாம் என்ற நிலை தோன்ற வேண்டும். அதன்பின் வீதி திருத்தங்கள், வீடுகள் திருத்தங்கள், மின்சார விஸ்தரிப்புகள் மற்றும் பொதுத் தேவைகளான சந்தை, குடிதண்ணீர், பாடசாலைகள், ச.ச.நிலையங்கள், விளையாட்டு மைதானங்கள், ப.நோ.கூ.சங்கக் கிளைகள், போக்குவரத்து, ஆலயங்கள் போன்றவை புனரமைக்கப்பட்டு சாதாரண நிலைமைக்குவர ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

### அதிகாரிகளுடன் பேச முடிவு

அரியாலை, கிராமத்திற்கும் நகரத்திற்கும் இடைப்பட்ட ஒரு பிரதேசம். யாழ்.மாநகர எல்லைக்குள்ளும், அதேநேரத்தில் யாழ். மற்றும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுகளிலும் அடங்கிய ஒரு பிரதேசம். பல கிராமசேவகர் பிரிவுகளைக் கொண்டது; யாழ்.மாநகரசபையின் பல வட்டாரங்களைக் கொண்டது. அரியாலையை மீண்டும் பழைய நிலைக்கு அதாவது 95ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்திற்கு முன்பு இருந்த நிலைக்கு அது சாத்தியப்படாவிட்டால் கடந்த வருடம் மே மாதத்திற்கு முன்பிருந்த நிலைக்காவது கொண்டு வரப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. இதற்கு தேவைப்படின் இராணுவ அதிகாரிகள், பொலீஸ் அதிகாரிகள், அரச அதிபர், பிரதேச செயலர்கள், யாழ்.மாநகரசபை மேயர் மற்றும் ஆணையாளர், கிராமசேவை உத்தியோகத்தர்கள், திணைக்கள அதிகாரிகள், சபை அதிகாரிகள் மற்றும் தேவைப்படுகின்ற அத்தனை உயர் அதிகாரிகள், அந்தந்த தேவைகேற்ப சந்தித்து செயற்படுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்பட்டது. (ஐ)

## வான்ட்மாஸ்ரரில் மாடுகளை ஏற்றிச் சென்ற நபர் சிக்கினார்

சுழிபுரத்தில் நேற்று மாலை இரு மாடுகளை கொடுமையான முறையில் - சட்டவிரோதமாக வான்ட் மாஸ்டரில் ஏற்றிச் சென்ற ஒருவர் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு பொலீஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

வலி.மேற்குப் பிரதேசசபைத் தலைவருக்கு இந்தவிடயம் தெரிவிக்கப்பட்டதை அடுத்து அங்கு நேரில் சென்ற அவர் இரு மாடுகளையும் வான்ட்மாஸ்டரையும், சாரதியையும் மானிப்பாய் பொலீஸில் ஒப்படைக்க ஏற்பாடு செய்தார்.

பிரஸ்தாப நபர் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவிருப்பதாகக் கூறப்பட்டது. (க-3)

## வெள்ளிதோறும் திருமுறை ஓதல்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் வெள்ளிக்கிழமைதோறும காலை 4 முதல் 5மணிவரை திருமுறை ஓதல் இடம்பெற்றுவருகின்றது. (க-90)

## உலக ஆசிரியர் தினத்தன்று கொடிதினம் அனுஷ்டிக்க முடிவு

வடமராட்சி கிழக்கு,ஒக்.03

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வடக்கு - கிழக்கு மாகாணத்திலும் ஏனைய மாகாணங்களிலும் உலக ஆசிரியர் தினத்தன்று கொடி தினம் அனுஷடிப்பதற்கு முடிவு செய்துளளது.

கொடிதினத்தன்று பாடசாலை ரீதியாக உண்டியல் மூலம் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடமிருந்து நிதி சேகரிக்கப்படும். இந்த நிதி சங்கத்தின் தலைமைச் செயலகத்தில் தகவல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்கும், இணையத் தளம் ஒன்றை அமைப்பதற்கும் பயன்படுத்தப்படவுள்ளது.

கொடி விற்பனை மூலம் ஒரு மாணவரிடமிருந்து 2 ரூபா, உண்டியல் மூலம் பாடசாலை ரீதியாக சேகரிக்கப்படவுள்ளது. (ம-182)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



06.10.2001 அன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள 20ஆவது பட்டமளிப்பு விழாவில் வணிகமாணிப் பட்டத்தைப் பெறவுள்ள மணி கல்வி நிறுவன இயக்குநரும், ஆசிரியரும், நண்பருமான **திரு.T.தனேந்திரன்** B.Com (Hons) M.M.Spl அவர்களை வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல உயர்வுகளைப்பெற எமது நல்வாழ்த்துக்கள்.

ஆசிரிய நண்பர்கள்.

P.கமலதாசன் - யா/இந்து மகளிர் கல்லூரி

P.உமாசங்கர் - யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தி.

(92917)

# இணுவைத் திருவூர் வாழ்த்துகிறது



மூத்த கலைஞர் 'கலாபூஷணம்'

**கே.ஆர்.சுந்தரமூர்த்தி**

அவர்களின் கலைச் சேவைக்கு எம் நன்றிகள்

- *இணுவை மக்கள்.*

(C/18493)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

**2001ஆம் ஆண்டின் 5ஆந்தரப் புலமைப்பரிசில் பரீட்சையில்** அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சிறந்தமுறையில் சித்தியடைந்தவர்களான



யா/புனித ஜோண் பொஸ்கோ மாணவி

**செல்வி உதயகுமார் நிவேதிகா**

(புள்ளிகள் 168)



யா/இந்து ஆரம்ப பாடசாலை மாணவி

**செல்வி ஜெயச்சந்திரன் சாரங்கா**

(புள்ளிகள் 142)

ஆகிய இரு மாணவிகளையும் பாராட்டி வாழ்த்துகின்றோம். அத்துடன் இவர்களுக்குக் கல்வியறிவு புகட்டி ஊக்கமளித்த அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களையும் பாராட்டுகின்றோம்.

நிஷானந்தா ஜுவல்லறி

*75, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

(C/18489)

# SHAMROCK

3/சோமசுந்தரம் லேன்.

**A/L 2002**

**DAY CLASS**

ஆரம்பம்:- 04.10 வியா. 7a.m.

Com.:- Mr.பசில் B.B.A.

Acc. :- Mr.தவா B.Com (Hons) Acc. (spl.)

☆ கலைப்பிரிவும் ஆரம்பமாகின்றது.

(C/18491)

# ராஜா யாழ்ப்பாணம்

பிரபுதேவா, சிம்ரன், ஆனந்தராஜ், மணிவண்ணன் மற்றும் பலர் நடித்த

**டைம்**

தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)

சனி, ஞாயிறு: 10.30, 2.0 0, 5.00 (பு.நே.)

(C/18457)

# நாகம்ஸ் சுன்னாகம்

அர்ஜுன், மனிஷாகொய்ராலா, ரகுவரன் நடிப்பில்

**முதல்வன்**

(ரீல்ஸ்)

காட்சிகள் :- 11.00, 2.30 (புதியநேரம்)

(92911)


# மரண அறிவித்தல்கள்

## செல்லத்துரை தெய்வானைப்பிள்ளை

### (மாணிக்கம்)

குடமியன், வரணியைப் பிறப்பிடமாகவும், விண்ணகம், கரணவாய் மத்தி, கரவெட்டியை தற்காலிக வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய செல்லத்துரை தெய்வானைப்பிள்ளை 02-10-2001 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி கந்தையா - குழந்தை ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற விசுவலிங்கம் செல்லத்துரை (முன்னாள் நீதிமன்ற உத்தியோகத்தர், மன்னார்) அவர்களின் அன்பு மனைவியும், காயத்திரி (இந்துக் கல்லூரி, சாவகச்சேரி), சிந்துஜா (இந்துக் கல்லூரி, சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், இலட்சுமிப்பிள்ளை, சின்னாச்சிப்பிள்ளை, நடராசா, யோகம்மா (நோர்வே), சிவசுப்பிரமணியம் (பிரான்ஸ்), சரஸ்வதிப்பிள்ளை (ஆசிரியை: தம்பசிட்டி பேருட் கல்வி நிலையம்), கமலாதேவி (பிரான்ஸ்), ரஞ்சினிதேவி (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரியும், முருகமூர்த்தி, சின்னராசா (நோர்வே), பவளானந்தன் (பிரான்ஸ்), யோகம்மா (பிரான்ஸ்), மதிவதனி ஆகியோரின் அன்பு மைத்துனியும், சிவனேஸ்வரி (பிரான்ஸ்)யின் சிறிய தாயும், கிருசார், பிரசாந்த், கிருத்திகா ஆகியோரின் பெரியதாயும், பிரகலன், பிருந்தா, பிரதீபன் ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.10.2001) புதன்கிழமை 2.00 மணியளவில் அவரது தற்காலிக இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்ளுக்காக எள்ளங்குளம் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நி.மு.- *குடமியன், வரணி.*

த.மு.- *"விண்ணகம்", கரணவாய் மத்தி. (தாமோதரம்பிள்ளை வித்தியாசாலை அருகில்)*

தகவல்: க.நடராசா (சகோதரன்)

(C/18494)

## வேலுப்பிள்ளை கந்தையா

### (இளைப்பாறிய அதிபர்)

இளவாலையைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்தவருமாகிய வேலுப்பிள்ளை கந்தையா அவர்கள் 29.09.2001 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் மகனும், காலஞ்சென்ற சண்முகம் - உத்தமிப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும், அன்னபூரணத்தின் அன்புக் கணவரும், சந்திரவர்ணன் (இளைப்பாறிய கிராம அலுவலர்), இந்திரப்பிரியதர்சினி, மேனகா (Germany), உதயவர்ணன் (Canada), இந்திரவர்ணன் (Swiss), விஜயவர்ணன் (Canada), Dr.ஜெயந்தினி (N.H.S.L., Colombo) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அ. பாலச்சந்திரன் (Germany), Dr.V. பரசுராமன் (Children Hospital, L.R.H.), சகுந்தலாதேவி (கொழும்பு), ஜீவரதி (Canada), கற்பகதேவி (கொழும்பு), சிவனேஸ்வரி (Canada) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பிரியங்கன், பிரசாந்தன், பிரியந்தி, கிருஷாந்த், திவ்யா, ஜனனி, சஜன், சித்தாரா, அக்ஷஜன், கர்ஷன் ஆகியோரின் அருமைப் பேரனும், ஆறுப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர், அளவெட்டி)யின் அன்புத் தமையனாரும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு, முத்தையா (இளைப்பாறிய ஆசிரியர், மான்ஸ் மகா வித்தியாலயம், உடுவில்) ஆகியோரின் அருமை மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03.10.2001) புதன்கிழமை பொரளை மன்னம்பரி மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (04.10.2001) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பவோன்மணி ஸ்ரோர்ஸ்*
*24, ஜம்பட்டா வீதி,*
*கொழும்பு - 13*
T.P. 331569, 075-351598.

தகவல்: க.சந்திரவர்ணன்

(C/18490)

# அமெ.-ஆப்கன் யுத்தம் வெடித்தால் நம் நாட்டிலும் நெருக்கடி ஏற்படும்

## சோபித தேரர் கூறுகிறார்

கொழும்பு,ஒக்.3

அமெரிக்க - ஆப்கன் போர் வெடித தால் எமது பிராந்தியத்திலும் நெருக் கடிகள் தோன்றும். ஆனால் அரசி யல் வாதிகள் இதுகுறித்து கவனத் தில் எடுத்ததாகத் தெரியவில்லை. உணவுப் பிரச்சினை ஏற்பட்டால் சமாளிப்பதற்கு வற்றாளைக் கொடி யொன்றைப் பயிரிடுமாறு கூட அவர் கள் மக்களைக் கேட்கவில்லை.

- இவ்வாறு தேசிய சங்க சபா வின் தலைவர் கோட்டே ஸ்ரீநாக விகாராதிபதி மாதுளுவாவே சோபித தேரர் கூறியுள்ளார்.

கோட்டேயில் நடந்த பாடசாலை நிகழ்வு ஒன்றில் பேசும்போதே தேரர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அதற்கு மேலும் கூறியதா வது:-

அமெரிக்காவில் தாக்குதல் இடம் பெற்ற வேளையில் அந்த நாட்டில் ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும் ஐக் கியப்பட்டு ஒரே குரலில் தமது எதிர்ப்பை - கண்டனங்களை வெளி யிட்டன. ஆனால் இங்கு நிலைமை வேறு.

எமது நாட்டின் வடபகுதியில் யுத்தம் நடைபெறுகிறது. அதே சமயம் தெற்கில் அரசியல் யுத்தம் இடம்பெறுகிறது. இன்னுமொரு புறத் தில் வரட்சியும், குடிதண்ணீர் இல்லாத பிரச்சினையும் தலை தூக்கியுள் ளன. நாடு எக்கேடு கெட்டுப்போனா லும் எம்மவர்கள் கூரை மீது ஏறி நின்று போராட்டம் செய்தாவது அமைச்சர் பதவியை பெறுவதிலேயே கண்ணுங்கருத்துமாக உள்ளனர் - என்றார். (க)

## வன்னியில் அவல நிலைமை

# இடம்பெயர்ந்த மக்களின் குடிசைகள் கடும் காற்றினால் பெரும் சேதம்

வவுனியா,ஒக்.3

கடந்த சில தினங்களாக வீசும் கடுங்காற்றால் வன்னியில் இராணு வக் கட்டுப்பாடற்ற பகுதியில் இடம் பெயர்ந்த மக்கள் வசிக்கும் குடிசை கள் சேதமடைந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இடம்பெயர்ந்த மக்கள் அமைத் துள்ள தற்காலிக குடிசைகளின் கூரை கள் கடுங்காற்றால் தூக்கி வீசப்பட் டுள்ளதாகவும் -

இதனால் மக்கள் பெரும் கஷ் டங்களை எதிர்நோக்குவதாகவும் தெரி விக்கப்பட்டது.

சேதமடைந்த குடிசைகளைப் புன ரமைக்க அரச அதிகாரிகளும், பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் நட வடிக்கை எடுத்துள்ளனர். (க-3)

### விபத்துக்கள் அதிகரிப்பு

கொழும்பு நகரில் இந்த வருட, முதல் நான்கு மாத காலப் பகுதி யில் மட்டும் 12,600 க்கும் மேற்பட்ட வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவற்றில் சுமார் 500 விபத்துக் களில் மரணம் சம்பவித்ததாகவும் அறி விக்கப்பட்டுள்ளது. (க-9)

### மீண்டும் எச்சரிக்கை

வாஷிங்டன்,ஒக்.3

ஒஸாமா பின்லேடனைக் கைய ளிக்காவிட்டால், தலிபான் ஆட்சியா ளர்கள் ஆட்சியிலிருந்து தூக்கி எறி யப்படுவார்கள் என்று அமெரிக்கா மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதேசமயம் ஆப்கானிஸ்தானுக் கான நேரம் கடந்து விட்டதாகவும் இராணுவ நடவடிக்கைகளை எதிர் நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ள தாகவும் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயரும் தலிபான் அமைப்புக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். (க-9)

### அரசமைப்புக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்றி வந்துள்ள அரசு, இந்த விடயத்திலும் உரிய காலத்துக்குள் அரசமைப்புக் கவுன்ஸிலை ஸ்தா பிக்கும் என நம்புகின்றோம். இந்தக் காலக்கெடுவை நாம் தளர்த்தப் போவதில்லை" - என்றார் விமல் வீரவன்ஸ.

அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு சிறுபான்மைக் கட்சிகளின் சார்பில் நியமிக்கப்படும் பிரதிநிதியைத் தெரிவு செய்வதற்காக, நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சிறிய கட்சிகளின் பிரதிநிதிகளை இன்று ஒரு கூட்டத் துக்கு சபாநாயகர் அழைத்துள்ளார் என்று தெரிவித்த விமல் வீரவன்ஸ, அந்தக் கூட்டத்தில் ஜே.வி.பி. பிரதி நிதியும் பங்குபற்றுவார் என்றும் தெரி வித்தார்.

அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு பத் துப் பேர் உறுப்பினர்களாக நியமிக் கப்பட வேண்டும்.

அவர்களில் ஐவரை பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவரும் கூட்டாக நியமிப்பர்.

மற்றைய மூவரை முறையே இலங் கைத் தமிழர், மலையகத் தமிழர், முஸ லிம்கள் ஆகியோரை நாடாளுமன்றத் தில் பிரதிநிதித்துவப்படுத்தும் எம். பிக்கள் தெரிவுசெய்வர்.

மற்றொரு உறுப்பினரை [illegible] பதி நியமிப்பார்.

பத்தாவது உறுப்பினரை [illegible] மன்றில் அங்கம் வகிக்கும் [illegible] மைக் கட்சிகள் சேர்ந்து [illegible] செய யும்.

இந்தப் பத்து உறுப்பினர்களில் எவரும் இன்னும் தெரிவு செய்யப்ப டாத நிலையில் -

அரசமைப்புக் கவுன்ஸிலை அமைப பதற்கான காலக்கெடு [illegible] மறு தினம் முடிய இருப்பது குறிப்பிடத் தக்கது. (உ)

# வன்னியில் சுகாதார வார எழுச்சி நிகழ்வுகள்

வவுனியா,ஒக்.3

வன்னியில் இராணுவக் கட்டு பாடற்ற பகுதிகளில் சுகாதார நிலையை மேம்படுத்துவதற்காக நேற்றுமுதல் சுகாதார வாரம் அனுஷ்டிக்கப்படுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மல்லாவி சுகாதாரப் பிரிவில் மல்லாவி, பாலிநகர், துணுக்காய், புத்துவெட்டுவான், பாண்டியன்குளம் ஆகிய பகுதிகளில் சுகாதார வாரத்தை ஒட்டி எழுச்சி நிகழ்வுகள் ஏற்பாடாகி யுள்ளன.

கிளிநொச்சி சுகாதாரப் பிரிவி லும் இந்த வாரம் அனுஷ்டிக்கப் பட்டுவருகின்றது.

நோய்கள் பரவாமல் தடுப்பதற் காக எழுச்சி நிகழ்ச்சிகள் பாடசாலை மட்டங்களிலும், பொது அமைப்புக் கள் மட்டங்களிலும் நடத்த சுகா தாரப் பகுதி நடவடிக்கை எடுத்துள் ளது. (க-3)

### ரிஸ்வின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளர் டி.எம்.ஜயரத்னவின் தரப் பில் கூறப்பட்டது.

இதனால் புதிய எம்.பியை யார் நியமிப்பது என்பது குறித்து இழுபறி நிலை தோன்றியுள்ளது.

இதேவேளை -

தேசியப் பட்டியல் மூலம் தெரி வான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பியை அந்தப் பதவியிலிருந்து விலக்கப் பொதுமக்கள் ஐக்கிய முன னணிச் செயலாளர் டி.எம்.ஜயரத்ன எடுத்த முயற்சிக்கு இடைக்காலத் தடை உத்தரவை நீதிமன்றம் பிறப் பித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (க-3)

### விமான நிலைய சுற்றாடலில் இருவர் கைது!

கொழும்பு,ஒக்.3

கட்டுநாயக்க விமான நிலையச் சுற் றாடல் பகுதியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரு தமிழ் இளைஞர்கள் படையினரால் கைது செய்யப்பட்டுள் ளனர்.

ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த விமானப் படையினர் இவர்களைக் கைது செய்ததாகவும் -

இவர்கள் தங்குமிடங்களில் இருந்து சில தடயப் பொருள்கள் கண்டெடுக் கப்பட்டிருப்பதாகவும் - தெரிவிக்கப் பட்டது. (க-3)

### 26 இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிட்டனர்.

இந்த 26 பேரும் இந்நாட்டுக்குள் வருவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய தாகக் கூறப்படும் 27 வயதான ஜேர் மன் நாட்டுப் பெண் சாரதிக்கு எதி ராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரி வித்தனர். (க-9)


உன் வாழ்க்கையில்
இறைவனை அனுபவிக்க விரும்புகிறாயா?
இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்



இந்தியாவிலிருந்து வருகைதரும் வழி காட்டிகளினால் நடத்தப்படும் இறை பிரசன்னம் நிறைந்த தியானங்கள், வழிபாடுகள்
உன் மனமாற்றத்தை விரும்பும்
இறைவன் உன்னை அழைக்கிறார்
புனித நீக்கிலார் ஆலய முன்றில்
நாவாந்துறை
03.10.2001
புதன்கிழமை மாலை 4 மணிமுதல் மாலை 7 மணிவரை
-யாழ்.மறைமாவட்ட குருக்கள் ஒன்றியம்-
விளம்பர அன்பளிப்பு:- ஆறுமுகம் சுப்பிரமணியம்
(மணியம் களஞ்சியம்)
இல. 29, நாவலர் வீதி,
நாவாந்துறை, யாழ்ப்பாணம்.
(92915)



நவீன கணனிகள்
நம்பமுடியாத விலையில்



Pentium 4 (1.4 GHz)
Rs. 89,500/= மட்டுமே
மேலும் ரூபா 55,000/= இல் இருந்து......
IBM Cyrix-333, Pentium III 633,
PentiumIII 866, PentiumIII 933, PentiumIII 1000
தரமான கணனிகளையும் கணனி உதிரிப்பாகங்களையும் நியாயமான விலையில், உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரே ஒரு நிறுவனம் IIS
கணனிகளைக் கொள்வனவு செய்யும் ஒவ்வொருவரும் 2 நபர்களுக்கு இலவசமான கணனிப் பயிற்சியை IIS இல் மேற்கொள்ள முடியும்.
IIS விற்பனைப் பிரிவு,
100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
TP. No : 283



OXFORD INSTITUTE
K.K.S, CHUNNAKAM.
ENGLISH
SPOKEN & GRAMMAR
பிரிவு II
ஆரம்பம்:- 07-10-2001
சனி, ஞாயிறு 6.30 a.m.
(பழைய நேரம்)
(ஏனையபாட நெறிகற்பிக்க விரும்பும் ஆசிரியர்கள்தொடர்பு கொள்ளவும்.) - நிர்வாகி
(92896)



CHEMISTRY CENTRE
புதிய பிரிவுகள் ஆரம்பம்
A/L 2003 Inorganic
A/L 2002 Physical & Organic
★ துரித மீட்டல் வினாவிடை
By:- திரு.அன்பு



கிறிஸ்ரல் சென்ரர்
நெல்லியடி
2002 A/L DAY
வர்த்தகப்பிரிவு
ஆரம்பம்;
09.10.2001 நண்.11.12.00
வழமையான யாழ்.ஆசிரியர் குழு
ECO. - திரு.வரதராஜன்.
COM. - திரு.பசில்
ACC. - திரு.பாலா (92863)



DAY CLASS
A/L 2002
சைன் உடுவில்
கலை, வர்த்தகப் பிரிவு
Ta. - V M.லிங்கம்
Lo. - S.சயந்தன்
Hc. } Hi. } - சுரேஸ்
Dra. - ரமேஸ்
Acc. - வின்சன்
Eco. - மோகன்
Com. - நந்தீஸ்
(92883)
ஆரம்பம்:05-10-01
காலை 8.00 மணி.



மீண்டும்
கொழும்பில் இருந்து மாதிரி வினாத்தாள்களுடன் இலங்கையின் அதிமுன்னணி ஆசிரியர்
விஞ்ஞானம் GRAPHS குமரன்
சகல முன்னணி கல்வி நிலையங்களிலும்
PAPER CLASS
☆வடபகுதி மாணவர்களுக்கு இறுதிச் சந்தர்ப்பத்தை வழங்குமுகமாக ஒவ்வொரு கல்விநிலையத்திலும் சொற்ப அளவு மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படு வர்.
☆வழமையான நேர அட்டவணையின்படி வகுப்புகள் யாவும் ஆரம்பமாகும் (C/18488)



SUBRA(14) சித்தன்கேணி
2002 A/L Day Class ஆரம்பம்: 4-10-2001 வியாழன் 6.15 காலை
எமது 'Super Grade' ஆசிரியர் குழாம்
Acc. : [illegible]
Eco. : S.ஜெயகுமார்
Com.: உங்கள் வழமையான பகல் நேர ஆசிரியர்
Log. : E.S.பவன்
Tam. : நாக.தமிழிந்திரன்
Hin. : T.ஸ்ரீஸ்
Geo. : S.ஞானகரன்
Dra. : S.சுரேஸ்
Chri. : S.அஜந்தா
Pol. : அசோக்
Phy. : ஜெயம், கருணாநிதி
Che. : அன்பு
Com. Ma. : A.பத்மநாதன்
Bio. : [illegible], கஜன்
C.G.I : குமாரவேல்
Eng. : விஜயபாஸ்கரர்
வெகுவிரைவில்!
பேச்சுச் சிங்களம்
உங்கள் அபிமான ஆசிரியர்
(C/18475)


## மரண அறிவித்தல்

### திருமதி கந்தசாமி பொன்னாச்சி

சுழிபுரத்தைச் சேர்ந்த திருமதி கந்தசாமி பொன்னாச்சி 29.09.2001 சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சி.கந்தசாமியின் அன்புத் துணைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி (மலேசியா), சிதம்பரப்பிள்ளை, சின்னாசிப்பிள்ளை மற்றும் இலட்சுமியார் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மங்களகுமாரி (கொழும்பு), தேவராசா (சவூதி), சாந்தகுமாரி, வைத்திலிங்கம் (சுவிஸ்), ராசலிங்கம் (ஜேர்மனி), சிவராசா (ஜேர்மனி); செல்வராசா (லண்டன்), பாலகிருஷ்ணன் (கனடா), சந்திர குமாரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், தவச்செல்வம் (கொழும்பு), பாலசுப்பிரமணியம் (கணனி ஆசிரியர், விக்ரோறியாக் கல்லூரி; இணைப்பாளர் - IIS சங்கானை), சிவகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.10.2001) புதன்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
அ. பாலசுப்பிரமணியம்
(ஆசிரியர், விக்ரோறியாக் கல்லூரி; இணைப்பாளர் IIS சங்கானை)

சுழிபுரம் மத்தி,
சுழிபுரம்.

(C/18495)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.10.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.